REGISTERED AS NEWSPAPER

# உதயன்

விலை - 30 ரூபா பக்கங்கள் - 24 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 220 ஆனி 22ஆம் நாள் திங்கட்கிழமை 6 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் உள்ளே...

## மா பக்கெற் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 6
5 கிலோகிராம் கோதுமை மா பக்கெட்டின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று

22

## மாணவி சடலமாக மீட்பு

வவுனியா, ஜூலை 6
வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர் இல்லத்தில் தூக்கில் தொங்கிய

22

## கிணற்றில் சடலம் மீட்பு

கோப்பாய், ஜூலை 6
ஆவரங்கால் கிழக்கில் உள்ள வயல் கிணற்றிலிருந்து குடும்பத் தலைவர் ஒருவரின் சடலம் மீட்

22

## லண்டன் வாசி கைகலப்பால் உயிரிழப்பு

கோப்பாய், ஜூலை 6
மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சை

22

### நல்லிணக்கம் மலர

# அல்பிரட் துரையப்பா போன்றோர் மீளத் தோற்றம் பெற வேண்டுமாம்

### மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 6
இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் தோற்றம் பெற வேண்டுமாயின் இளம் தலைமுறையினர் மத்தியில் அல்பிரட் துரையப்பா, மௌலானா ஆகியோர் மீண்டும் தோற்றம் பெற வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது விசேட ஊடக அறிக்கையினூடாக தெரிவித்துள்ளார்.

22

## கரும்புலிகள் நாளில் கதிகலங்கிய இராணுவம்

### வடக்கு முழுவதும் நேற்று சோதனைக் கெடுபிடிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6
தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் நாள் நேற்றாகும். ஒடுக்கப்பட்ட இனத்தின் விடிவுக்காக, விடுதலைக்காக தம்முயிரை ஆகுதியாக்கிய புனிதர்களை தமிழ் மக்கள் நினைவேந்திடக் கூடாது என்பதற்காக வடக்கு மாகாணம் முழுவதும் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

22

மன்னாரில் மர்ம மனிதன்:

## வடக்கில் தேவாலயங்களில் உச்சக்கட்ட பாதுகாப்பு!!!

யாழ்ப்பாணம், ஜூலை 6
மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்துக்குள் சந்தேகத்துக்கிடமாக ஒருவர் மர்மப் பொதிகளுடன் நடமாடினார் என்று தகவல் வெளியானதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அவரைப் பாதுகாப்பு படையினர் தேடி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதனையடுத்து

19

## பாடசாலைகள் திறப்பு இரண்டாம் கட்டம் இன்று

கொழும்பு, ஜூலை 6
அனைத்துப் பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திறக்கப்படவுள்ளன. நான்கு கட்டங்களாகப் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே, இரண்டாம் கட்டமாக அனைத்துப்

19

## சிவாஜிலிங்கம் கைதாகி விடுவிப்பு சிறிதரனிடம் பொலிஸ் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 6
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.
வல்வெட்டித்துறையிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் அவர் கைது செய்யப்பட்டார்.

22



## டிப்பர் பெட்டி வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு

### நீர்வேலியில் சோகம்

கோப்பாய், ஜூலை 6
யாழ்ப்பாணம், கோப்பாய் சந்திக்கு அண்மையாகவுள்ள கனரக வாகனத் திருத்தகம் ஒன்றில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடந்த விபத்தில் டிப்பர் வாகனத்தின் உரிமையாளர் உயிரிழந்துள்ளார்.
திருத்தகத்தில் டிப்பர் வாகனத்தின்

22

## முன்னணி அலுவலகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தைச் சோதனையிட்ட பொலிஸார், தேர்தல் பரப்புரைச் சுவரொட்டி வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.
கரும்புலிகள் நாள் நேற்றைய தினம் என்பதால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

22

டிப்பர் – மோ.சைக்கிள் விபத்து

## பல்கலை மாணவன் பரிதாபப் பலி



கிளிநொச்சி, ஜூலை 6
பூநகரி பகுதியில் நேற்றுக் காலை டிப்பர், மோட்டார் சைக்கிள் விபத்தில் மொறட்டுவப் பல்கலைக்கழக கணிய அளவையியல் மூன்றாம் வருட மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
மோட்டார் சைக்கிளில் பயணித்த

22

## டிப்பர் மோதியதில் இன்னொருவர் சாவு

### ஒரேநாளில் இரண்டாவது விபத்து




கிளிநொச்சி, ஜூலை 6
கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பிராய் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
முல்லைத்தீவு விசுவமடுவைச் சேர்ந்த கே.சிவனேசன் (வயது44) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை ஓர் விபத்துச் சம்பவத்தில் பல்கலைக்கழக மாணவன் உயிரிழந்த நிலையில் நேற்று மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தின் பூந

22

அரசியல் தீர்வுக்கு

# மீண்டும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு அமைப்பு

## புதிய அரசு முன்னெடுக்கும் என்கிறார் பேராசிரியர் திஸ்ஸ



**கொழும்பு, ஜூலை 6**

**தேசிய இனப் பிரச்சினைக்கு புதிய அரசு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவை நிச்சயமாக அமைக்கும் என்று நம்புவதாக லங்கா சமசமாஜக் கட்சியின் செயலரும் முன்னாள் ஆளுநரும் பேராசிரியருமா திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்த அரசின் காலத்தில் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்காக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டது. அதில் பல கட்சிகள் அங்கம் வகித்தன. தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்காகப் பல தடவைகள் கூடி தீர்க்கமான யோசனைகளும் முன்வைக்கப்பட்டன. அதன் பின்னர் யோசனை நகலைத் தயாரித்து இருந்தோம். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டும் பங்குபற்றி இருக்கவில்லை. தமிழ் மக்களின் தீர்வில் உண்மையான அக்கறை இருந்திருந்தால் அதில் பங்கு பற்றி தமது யோசனைகளையும் முன் வைத்திருப்பார்கள். அவர்களுக்கு தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் உண்மையாக அக்கறை இல்லை என்றே நான் கருதுகின்றேன்.

தற்போது தேர்தல் காலத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தீர்வு தொடர்பில் மக்களிடம் பேசி வருகின்றனர்.

புதிய அரசு தீர்வுகாணும் செயற்பாட்டில் ஈடுபடும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் நிச்சயமாக பங்குபற்ற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். என்னைப் பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச் சட்டம் மாற்றப்படக் கூடாது. அதனைப் பலப்படுத்தி பாதுகாக்கவேண்டும்- என்றார். (ஒ,5,20)

# மொட்டைக் கடிதத்துக்கு வேட்பாளரிடம் விசாரணை

வவுனியா, ஜூலை 6

தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் வன்னி மாவட்ட வேட்பாளரின் பெயரில் பொலிஸாருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக் கடிதம் தொடர்பில் செட்டிக்குளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தால் நேற்று மாலை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் எஸ்.தவபாலனது பெயரில் புளியங்குளம் பொலிஸாருக்கு எதிராக செட்டிக்குளத்தில் உள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடிதம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தால் புளியங்குளம் பொலிஸார் ஊடாக அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக புளியங்குளம் பொலிஸாரிடம் சென்று வேட்பாளர் கேட்டபோது வவுனியா பொலிஸ் நிலையத்துக்குச் செல்லுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற வேட்பாளரை வவுனியா, மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பணிமனைக்குப் பொலிஸார் அனுப்பியுள்ளனர். அங்கு சென்றபின் செட்டிகுளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்குச் செல்லுமாறு வேட்பாளரிடம் தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு சென்ற அவரிடம், அவரது பெயரில் வந்த கடிதம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். சுமார் அரை மணிநேரத்துக்கும் மேலாக வாக்கு மூலம் பெற்ற பொலிஸார், அனுப்பப்பட்ட கடிதத்துக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்று வேட்பாளர் தெரிவித்ததையடுத்து, அவரை விடுவித்தனர். (ஒ,5,19)

மகஸின் சிறையிலிருந்து

# 20 அரசியல் கைதிகள் அநுராதபுரம் மாற்றம்

கொழும்பு, ஜூலை 6

கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 அரசியல் கைதிகள் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்தத் திடீர் நடவடிக்கைக்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை.

நேற்றுமுன்தினம் 10பேரும், நேற்றைய தினம் 10 பேருமாக 20 தமிழ் அரசியல் கைதிகள் இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 10 ஆண்டுக்கும் குறைவான சிறைத்தண்டனைகள் விதிக்கப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது




# ஜிந்துப்பிட்டி நபருக்கு கொரோனா இல்லை

## 5 தடவைகள் சோதனை

கொழும்பு, ஜூலை 6

கடந்த ஜூலை மாதம் 2ஆம் திகதி கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட கொட்டாஞ்சேனை ஜிந்துபிட்டியை சேர்ந்த நபர் மீது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவரின் உடலில் கொரோனா வைரஸ் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக 5 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் பின்னர் அவரின் உடலில் கொரோனா வைரஸ் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அதேபோல், அவருடன் நெருங்கிப் பழகிய நிலையில் கந்தக்காடு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்ட 154 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அனைவரையும் அவர்களில் வீடுகளுக்க அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஒ,5)



# மைத்திரிக்கு வாக்கு சேகரித்த கோத்தாபய

கொழும்பு, ஜூலை 6

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று பொலனறுவையில் நடைபெற்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பொலனறுவை மாவட்ட முதன்மை வேட்பாளருமான மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபயவும் பங்கேற்றார். (ஒ,5,22)

# பாடசாலைச் சுவரை அசிங்கப்படுத்திய சுவரொட்டி

## வேட்பாளர் அதே பாடசாலையின் ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், 2020 ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுகின்றார். இந்த நிலையில் அவர் கற்பிக்கும் கல்லூரியின் சுவரில் அவரது படம் பொறிக்கப்பட்ட தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை தொடர்பில் கல்விச் சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக்குழுவில் போட்டியிடும் ஆசிரியர் ஒருவரின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை தொடர்பிலேயே விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் சுவரொட்டிகள் எந்த இடத்திலும் ஒட்டப்படுவது சட்டப்படி குற்றமாக உள்ள நிலையில், ஆசிரிய வேட்பாளரின் சுவரொட்டிகள் பாடசாலைச் சுவரில் ஒட்டப்பட்டுள்ளமை ஆச்சரியமளிக்கிறது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)



# தேவா குழுவும் ஆவா குழுவுமே சமூக சீர்கேடுகளுக்குக் காரணம்

## வேட்பாளர் ஈஸ்வரபாதம் சரவணபவன் காட்டம்



**யாழ்ப்பாணம், ஜூலை 6**

**“வடக்கில் சமூகச் சீர்கேடுகள் தலைவிரித்து ஆடுகின்றன. சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த அரசு திராணியற்று இருக்கிறது. அன்று டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. ஒட்டுக் குழுக்கள் செய்தவற்றை இன்று ஆவாக்குழு என்ற பெயரில் சிலர் காட்டுமிராண்டித்தனமாக செய்துகொண்டிருக்கின்றனர்” என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் காட்டமாகத் தெரிவித்தார்.**

கைதடியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான நீதிவான் ந.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்களின் வாழ்வாதாரக் கட்டமைப்புக்களை சமூக, கலாசார மற்றும் பண்பாட்டுக் கோலங்களை திட்டமிட்டு அழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டி லேயே சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகின்றன. அவற்றின் எடுபிடிகளாக உள்ள சில கோடாரிக்காம்புகளும் அதற்குத் துணைபோகின்றமை வரலாறு.

தமிழ் மக்களின் அரசியல் பலத்தை சிதைப்பதற்காக பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் வடக்கில் களமிறக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் கட்சியாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வீழ்த்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் கூட்டாக பல கட்சிகள் செயற்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் ஒரு தனிச் சிங்கள சுயேச்சைக் குழு ஒன்றும் களமிறங்கியுள்ளதென்பது இதன் உண்மைத் தன்மையின் வெளிப்பாடாகும். இது கூட்டமைப்புக்கு எதிரான சதி மட்டுமல்ல, எமது தேசியத்துக்கு எதிரான சதி என்பதனை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். நாட்டில் மறைமுகமான சர்வாதிகார ஆட்சி இடம்பெறுகின்றது. அமைச்சுகளின் செயலாளர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவ சேவையில் உள்ளவர்களாகவோ அல்லது முன்னாள் இராணுவத்தினராகவோ உள்ளனர். இது தாராண்மை வாதத்துக்கு முற்றிலும் முரணானது. இதனை ஓர் இராணுவ ஆட்சியை நோக்கிய முன்னெடுப்பாகவே கொள்ளமுடியும்.

### முடியுமான அளவுக்கு உதவியுள்ளோம்

கடந்த ஆட்சியின்போது முழுமையாகத் தீர்வைப் பெற முடியாவிட்டாலும் முடியுமான அளவு எமது மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைத்துள்ளோம். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரம்பேசுதலின் மூலமே சாத்தியமானது. 7ஆயிரம் ஏக்கரில் நாலாயிரம் ஏக்கர் காணியை விடுவித்தோம். சுமார் 300 கோடி ரூபா நிதியில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டோம்.

### கூட்டமைப்பை விமர்சிப்போர் என்னதான் செய்துள்ளனர்?

தீர்வு முயற்சியின் ஒரு கட்டமாக புதிய அரசியல் வரைபு ஒன்றை உருவாக்கும் செயற்பாட்டின் இறுதிக்கட்டம் வரை உழைத்தோம். துரதிஸ்டவசமாக அதனை நிறைவேற்ற முடியவில்லை. கூட்டமைப்பு என்ன செய்தது என கேள்வி கேட்பவர்கள் தமிழ் மக்களுக்கு ஆக்கபூர்வமாக எவற்றைச் செய்தார்கள்?. கேட்பவர்களுக்குத் தெரியாது விட்டாலும் மக்களுக்கு நன்றாகத் தெரியும், கூட்டமைப்பு என்ன செய்தது என்பது. எனவே அன்பான வாக்காளப் பெருமக்களே! உதிரிக் கட்சிகளுக்கு வாக்களிக்கச் செய்து வாக்குகளை சிதறடிக்கச் செய்ய பேரினவாதம் கங்கணம்கட்டிச்செயற்படுகின்றது. அதற்கு துணைபோகக் கூடாது என்பதனை நன்குணர்ந்தவர்கள் பொதுமக்களான நீங்கள். எனவே நன்றாகச் சிந்தித்து கூட்டமைப்பு அமோக வெற்றிபெற வாக்களித்து எம்மைப் பலப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்-என்றார். (த-ந)



# சுயேச்சைக் குழுவின் அலுவலகம் திறப்பு

வவுனியா, ஜூலை 6

வன்னித் தேர்தல் தொகுதியில் சுயேச்சைக் குழு 3 இன் வேட்பாளர்கள் அறிமுகமும் அலுவலகத்திறப்பு நிகழ்வும் ஈரப்பெரியகுளம் விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றன.

வன்னி மக்கள் காப்பகத்தின் தலைவர் நீல் சாந்த தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அதில், வன்னி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட சமூக சுயதொழில் வேலைத் திட்டங்கள் அடங்கிய கைநூல் ஒன்றை வன்னி மக்கள் காப்பகம் வெளியிட்டது.

அதில் உரையாற்றிய காப்பகத்தின் தலைவர்,

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கடமைகளை கடந்த காலங்களில் மக்களுக்கு சரிவர மேற்கொண்டிருந்தால் நான் தென்பகுதியிலிருந்து இங்கு வந்து தேர்தலில் போட்டியிடவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

நான் சமூக நலன் சார்ந்த சுயதொழில் வலுவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவே வன்னி மக்கள் காப்பகத்தை நிறுவி செயற்பாடுகளை மேற்கொள்ள வன்னிப் பெருநிலப்பரப்புக்கு வந்துள்ளேன் - என்றார்.

நிகழ்வில் வன்னி மக்கள் காப்பகத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-110)

# கொச்சைப்படுத்துவோருக்கு வாக்களிக்காதீர்கள்

## வலியுறுத்துகிறார் முன்னாள் உபதவிசாளர்

மட்டக்களப்பு, ஜூலை 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்துகொண்டு தமிழர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துபவர்களை தவிர்த்து கூட்டமைப்பிலுள்ள ஏனையவர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், “வேறு கட்சிகளுக்கு வாக்களிப்பதன் மூலம் எமது பலத்தை நாங்களே இழக்கின்றோம் என்பதை மட்டக்களப்பு தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.” என்று தெரிவித்தார்.

அரியநேத்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.நடராஜா, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞரணித் தலைவர் கி.சேயோன் மற்றும் பிரதேசசபைத் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர். (த-150)

# கட்சி ஆதரவை மாற்றிய உறுப்பினர்

திருகோணமலை, ஜூலை 6

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கிண்ணியா நகர சபை உறுப்பினராகச் செயற்பட்டுவந்த உமர் றழி ரனீஸ், தனது ஆதரவாளர்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அப்துல்லா மஃறூப்புடன் நேற்றுமுன்தினம் இணைந்துகொண்டார். (த)

# 20 ஆசனம் பகிடியே!

## சம்பந்தனின் கருத்துக்கு ஆனந்தசங்கரி ‘ஜோக்.’

யாழ்ப்பாணம், ஜூலை 6

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் 20 ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெற்றுத்தரும்படி அதன் தலைவர் சம்பந்தன் தமிழ் மக்களுக்கு விடுத்த கோரிக்கை ஒரு பகிடியான விடயம். அதுமட்டுமல்ல, சரியாக சிந்திப்பவர்களின் கோபத்துக்கும் ஆளாகியுள்ளது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளுக்கு இருந்த பெரும் செல்வாக்கை தப்பாக பயன்படுத்திக் கொண்டு தன்னை சுற்றி ஒரு சாம்ராச்சியத்தை உருவாக்கி கொண்டமை துரதிர்ஸ்டமே. அவர் விடுதலைப் புலிகளினதும் அப்பாவி தமிழ் மக்களினதும் நம்பிக்கையை தப்பான வழியில் பெற்றுக்கொண்டார்.தமிழ் மக்களுடைய விடயங்களில் ஏகபோக உரிமை தனக்கே உண்டு என்று கற்பனையில் ஒரு பெரிய அந்தஸ்தை உருவாக்கிக் கொண்டார் என்றும் சங்கரி தனது செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (த)

# சாட்சிகளை வைத்துக்கொண்டு கொலை செய்யவே மாட்டோம்

## நாமல் ராஜபக்ச கூறியதாக முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஜூலை 6**

**வசீம் தாஜுதீனின் கொலை குறித்து நாடாளுமன்றத்தில் குரலெழுப்பும்போது, ஜோன்சன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, பிரசன்ன ரனவீர போன்ற உறுப்பினர்கள் என்மீது தாக்குதல் நடத்த முற்பட்டனர். தாஜுதீன் விவகாரம் பற்றிக் கதைக்க வேண்டாம் எனவும் அச்சுறுத்தினர். 10 நிமிடம் சபாநாயகரினால் நாடாளுமன்றம் ஒத்திவைக்கவும்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட அந்த நேரத்தில் நாமல் ராஜபக்ச எனக்கு அருகில் வந்து எனது தோளில் கையைப்போட்டு, ஐயோ, நாம் கொலைசெய்தாலும் சாட்சிகளை வைத்துவிட்டு கொல்ல மாட்டோம்' எனக் கூறினார்.**

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். புதுக்கடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

முஸ்லிம்களை நசுக்கி பேரினவாதிகளை சந்தோசப்படுத்த வேண்டும் என்ற கொள்கையுடன் ராஜபக்ஷ அரசு செயற்படுகின்றது. விரும்பியோ விரும்பாலோ நாம் அதற்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கியிருக்கிறோம்.

இந்த அரசின் அமைச்சர்கள் பலர் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாத தாக்குதளின் பின்னர் முஸ்லிம்களுக்கு எதிராகப் பரப்புரை செய்ததுடன், முஸ்லிம் அரசியல் தலைவர்களை இலக்கு வைத்து பல்வேறு வகையிலும் இனவாத செயற்பாடுகளை முன்னெடுத்தனர். இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ மத்திய கொழும்புக்கு ஆற்றிய சேவைகள் அவரின் உயிரிழப்புக்குப் பின்னர் ஸ்தம்பித்துவிட்டது.

எமது பிரதமர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஊடாக நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து கொழும்பு அபிவிருத்தியை மீளக் கொண்டு செல்லவே எமது பயணத்தை ஆரம்பித்திருக்கிறோம். எமது பிள்ளைகளுக்கு அமைதியான நாட்டை ஒப்படைப்பதற்காக நீங்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஒ,5)

# பெரும்பான்மை ஆட்சியை எவர் தயவுமின்றி அமைப்போம்

*காதர் மஸ்தான் கூறுகிறார்*

முல்லைத்தீவு, ஜூலை 6

எந்தக் கட்சியின் ஆதரவும் இல்லாமல் சிறிலங்கா பொதுஜன பெரமுன தனித்து ஆட்சி அமைக்கும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பொதுஜன பெரமுன கட்சியின்வன்னிமாவட்டத்தின்முதன்மை வேட்பாளருமான காதர் மஸ்தான் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் நேற்றுத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார். இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

இறைவனின் ஆசீர்வாதத்துடன் பெரமுன ஆட்சி அமைக்கும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நாங்கள் பெறுவோம் என்று நம்புகின்றோம். எவரின் தயவுமின்றி நாம் ஆட்சி அமைக்கக் கூடிய நிலையில் இருக்கின்றோம்.

எங்கள் கட்சிக்கு வாக்களிப்பதால் மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய அமைச்சு ஒன்று இந்தப் பகுதிக்கு கிடைக்கும். மக்கள் மன்றம் நிகழ்வு வவுனியாவில் நடந்தது. அப்போது என்னிடம் ஒரு கேள்வி எழுப்பினார்கள். 'நீங்கள் இவ்வளவு பேசுகின்றீர்கள். முஸ்லிம் ஒருவருக்கு அமைச்சுப் பதவியை இந்த அரசு வழங்கவில்லையே' என்று கேட்டார்கள். வன்னி மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளராக எந்த நம்பிக்கையில் என்னைக் களமிறக்கியிருக்கின்றார்களோ அந்த நம்பிக்கை தான் அமைச்சுக் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது- என்றார். (ஒ,5,19)

# அரிசிக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்த இடைத்தரகர்களுக்கு இடமளியாதீர்

## பொலனறுவை விவசாயிகள் ஜனாதிபதியிடம் நேரில் வேண்டுகோள்

பொலன்னறுவை, ஜூலை 6

அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்த இடைத் தரகர்களுக்கு இடமளிக்க வேண்டாமென பொலன்னறுவை விவசாயிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். கடந்த போகங்களின் போது அதிக அறுவடை கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே அரிசி தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிக்கு இடமளிக்கக்கூடாதென விவசாயிகள் தெரிவித்தனர்.

பொதுஜன பெரமுனவின் சார்பில் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக நேற்று முற்பகல் பொலன்னறுவை சிறிபுர பிரதேச சபை விளையாட்டரங்கில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி கோத்தபாயவிடம் விவசாயிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அழிவுக்குள்ளாகியிருந்த அரிசிக் களஞ்சியங்களை இந்த அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் புனர்நிர்மாணம் செய்வதற்கும் நெல்லை முறையாகக் கொள்வனவு செய்வதற்கும் முறைமையொன்றை தயாரித்ததாகவும் ஜனாதிபதி விவசாயிகளிடம் தெரிவித்தார். எதிர்வரும் காலங்களில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளைப் பாதுகாத்து பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார். (ஒ,5)



# விபத்துக் குற்றச்சாட்டு குசல் மெண்டிஸ் கைது

கொழும்பு, ஜூலை 6

இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர் குசல் மெண்டிஸ் கைதுசெய்யப்பட்டுள்ளார். குசல் மெண்டிஸின் ஜீப் ரக வாகனம் மோதி ஒருவர் உயிரிழந்ததை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று அதிகாலை ஹொரேதுடுவ பகுதியில் நடந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார். குசல் மெண்டிஸின் வாகனம், சைக்கிள் ஒன்றுடன். மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. பாணந்துறை, கொரகபொல பகுதியைச் சேர்ந்த 64 வயதான ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பாணந்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ,எ)

# புலிகள் மீது குற்றஞ்சுமத்துபவரை ஜெனிவாவுக்கு அனுப்பக்கூடாது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் கோரிக்கை

வவுனியா, ஜூலை 6

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆள்சேர்ப்புச் செய்தார்கள். முஸ்லிம்களை வெளியேற்றி இனச் சுத்திகரிப்புச் செய்தார்கள் என்று சொல்லி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் குற்றம் சுமத்துபவர்களை ஜெனிவாவுக்கு இனி அனுப்பக்கூடாது. இவ்வாறு வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா ஆகிய நாடுகள் ஊடாகத்தான் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைக் கண்டுபிடிக்க முடியும். அந்த நாடுகளை நாம் இங்கே அழைக்கின்றோம். கடந்த 11 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை கொடுக்கப்பட்டது. அவர்கள் புதிய அரசமைப்பு என்ற பெயரில் அடிமை சாசனத்தை கொண்டுவர முயன்றார்கள். சுமந்திரன் ஜெனிவாவில் சர்வதேச விசாரணையை நிராகரித்தார். 2021ஆம் ஆண்டு சர்வதேச விசாரணைக்கு நாம் அழைப்பு விடுப்பதற்கு வாய்ப்புண்டு. எனவே இந்தத் தேர்தலில் ஜெனிவாவில் எமக்காகக் குரல் கொடுக்கக் கூடிய சட்டத்தரணிகளை நாம் தெரிவு செய்து அனுப்பவேண்டும்.

இதேவேளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் மைத்துனர் மற்றும் சிறிதரனின் மனைவி இருவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் குருதியே ஓடுகின்றது. ஆனால் சுமந்திரன் மற்றும் சிறிதரனின் உடலில் கதிர்காமரின் குருதி ஓடுகின்றது. என்றனர். (ஒ,5,110)



தாதிய பரிபாலகரின்

# கைபேசியை தூக்கி சென்றது குரங்கு

வவுனியா, ஜூலை 6

வவுனியா மருத்துவமனையில் கடமையாற்றும் தாதிய பரிபாலகரின் பெறுமதிமிக்க தொலைபேசியை (அப்பிள் ரகத்தைச் சேர்ந்த கைப்பேசி) குரங்கு தூக்கிச் சென்ற சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை வவுனியா மருத்துவமனைக்குள் நுழைந்த குரங்குகள், தாதிய பரிபாலகரின் கைபேசியை தூக்கிச்சென்றது. அதனை துரத்திச் சென்ற நிலையில் மதில் வழியாக பாய்ந்த குரங்கு கைபேசியுடன் ஏ9 வீதியில் உள்ள மரம் ஒன்றில் ஏறிக்கொண்டது. முயற்சிகள் பல எடுத்த நிலையில் நீண்ட நேரமாகியும் குரங்கு கைபேசியை கீழே வீசவில்லை.

வவுனியா நகரப்பகுதியில் சிறியான் ரக குரங்குகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதுடன் வியாபார நிலையங்களிற்குள் செல்லும் அவை அங்கிருக்கும் பொருள்களையும், பணப்பைகளையும், தூக்கிச்செல்லும் சம்ப வங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,110)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கூட்டமைப்பின் அருமை

'உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை, அப்பனில்லாவிட்டால் தெரியும் அப்பனின் அருமை' என்று சொல்வார்கள். அவ்வாறு கூட்டமைப்பின் அருமையை நேற்றைய கரும்புலிகள் நாளில் தமிழ் மக்கள் நன்றாகவே உணர்ந்திருப்பார்கள். கடந்த 5 வருடங்களாக நல்லாட்சிக் காலத்தில், தமிழர் பகுதிகளில் ஓரளவு நிம்மதியான வாழ்வியலை மேற்கொள்ள முடிந்தது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள், திலீபன் நினைவேந்தல், கரும்புலிகள் நாள் என்பவற்றை பகிரங்கமாகவே அனுஷ்டிக்க முடிந்தது. அதனை அரசும், படைத்தரப்பும் நினைவேந்த அனுமதி வழங்காவிட்டாலும் கூட, கண்டும் காணாத போக்கையே கடைப்பிடித்தன. மஹிந்த ராஜபக்சவை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றுவதும், அதன் பின்னர் நல்லாட்சி அரசை நிறுவுவதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கு அளப்பரியது. சிறுபான்மையினரின் வாக்குமூலமே மஹிந்தவை வீழ்த்தி மைத்திரி ஜனாதிபதியாக முடிந்தது. அதன் மூலமே ராஜபக்சக்களின் அதிகாரம் வெட்டப்பட்டு, புதியதொரு அரசியற்போக்கு முளைவிட்டது. அதன் பெறுபேறாகவே ஐ.தே,கவும், சுதந்திரக்கட்சியும் கூட்டாக நல்லாட்சி அரசை அமைக்க ஏதுவானது. பின்னர் அந்த அரசில் இருந்து சுதந்திரக்கட்சி விலகியபோதும், கூட்டமைப்பின் ஆதரவே நல்லாட்சி அரசு தப்பிப் பிழைத்தமைக்குக் காரணம்.

இந்த நிலையில் பொதுவாக ஒரு குற்றச்சாட்டு கூட்டமைப்பு மீது வைக்கப்படுவதுண்டு. "நல்லாட்சி அரசுக்கு முட்டுக் கொடுத்து தமிழர்களுக்கு எதனைக் கூட்டமைப்பு பெற்றுத்தந்தது?' என்பதே அது. ஆனால் அப்படிக் கூட்டமைப்பு என்ன பெற்றுத்தந்தது என்பதற்கு இப்போதைய ஆட்சி மாற்றத்தில் தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது கொரோனா கால ஊரடங்கின் போது அமைக்கப்பட்ட சோதனைச் சாவடிகள் நிரந்தரமாகி விட்டன. ஆனால் இதுவே நல்லாட்சி அரசாக இருந்தால் கூட்டமைப்பின் அழுத்தத்தால் அவை அகற்றப்பட்டிருக்கும். கோத்தாபய அரசின் காலத்தில் ஒரு இஞ்சியளவு நிலமாவது விடுவிக்கப்பட்டிருக்கிறதா? இல்லையே. ஆனால் கூட்டமைப்பு தன்னுடைய பேரம் பேசும் சக்தியைப் பாவித்து வலி.வடக்கில் சிறுகச்சிறுக ஒவ்வொரு காணியாக விடுவிக்கச்செய்து, இப்போது அங்கு பெருமளவான மக்களின் காணிகள் அவர்களிடமே மீண்டிருக்கிறது. இப்படி சிறுதுளியாக விடு விக்கப்பட்டதால் இந்தக் காணி விடுவிப்பு பேரினவாதிகளின் கண்களை உறுத்தவில்லை. இல்லாவிட்டால் போர்க்கொடி தூக்கி, ஒரு அங்குலமேனும் தரவிடாமல் தடுத்திருப்பார்கள். அதனாலேயே இப்படியான விடயங்களை நல்லாட்சி அரசும், கூட்டமைப்பும் ஊதிப்பெருப்பிக்காமல் அடக்கி வாசித்தன.

இப்படி அடக்கி வாசித்ததை பலரும் அறியாமல், கூட்டமைப்பு எதுவுமே செய்யவில்லை என்று வாய்க்கு வந்ததைச் சொன்னார்கள். ஆனால் அதன் விளைவுகளை அனுபவரீதியாக அவர்கள் உணரத் தொடங்கையில்தான் கூட்டமைப்பு இவ்வளவெல்லாம் செய்துள்ளதா? என்று வாய்பிளக்கிறார்கள். இப்போது கூட்டமைப்பு ஆதரவளித்த சஜித் ஜனாதிபதியாகியிருந்தால், நேற்றைக்கு கரும்புலிகள் தினத்துக்கான படைக்கெடுபிடிகள் இருந்திராது, சிவாஜிலிங்கம் கைதாகி இருக்கமாட்டார், சிறிதரன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்க மாட்டார், அக்கராயன் மன்னனை நினைவேந்தத் தடை விதிக்கப்பட்டிருக்காது, தமிழ்த் தேசிய முன்னணியின் அலுவலகம் முற்றுகைக்குள் முடங்கியிருக்காது. இப்படியான ஒரு சுதந்திரவெளியை கண்ணுக்குத் தெரியாமல், அரசுக்கு நெருக்குதல் கொடுத்து கூட்டமைப்பு உருவாக்கியிருந்தது. அது உடைந்துபோனதாலேயே இப்போது மீண்டும் படைத் தரப்பின் கெடுபிடிகள் முளைக்கின்றன. இப்போதும் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. நாடாளுமன்றத் தேர்தலை மிகச்சரியாகப் பயன்படுத்தி, வாக்களிப்பு அலை ஒன்றை உருவாக்கி, கூட்டமைப்பின் பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கச் செய்தால், மீண்டும் அச்சமற்ற ஒரு சூழலை நாம் அனுபவிக்க முடியும்.

# அக்கராயனுக்கும் ஆப்பு!

**கிளிநொச்சி, ஜூலை 5**

**கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அக்கராய மன்னனை நினைவு கூருவதற்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து தடை விதித்துள்ளனர்.**

அக்கராய மன்னனை நினைவு கூரும் நிகழ்வொன்று இன்று கரைச்சி பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் நிகழ்வை நடத்துவதற்கு பொலிஸார் தடை விதித்தனர். பொலிஸாருடன் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் நீண்ட நேரம் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர். எனினும் இன்று கரும்புலிகள் நாள் என்பதால் நிகழ்வை நடத்த முடியாது என தெரிவிக்கப்பட்டதை அடுத்து நிகழ்வு இடம்பெறவில்லை.

13ஆம் நூற்றாண்டில் பொலநறுவை இராசதானிக்குப் பின்னர் வன்னி நிலம் தமிழ் அரசர்களால் ஆளப்பட்டது. அத்தகைய அரசர்களில் ஒருவரே அக்கராய மன்னன். அவரது ஆட்சிக்குள்ளான பிரதேசமே இப்போது அக்கராயன் என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

அந்த மன்னனின் நினைவாக 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி சிலை திறந்து வைக்கப்பட்டிருந்தது. அந்த நாளை நினைவு கூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட் விழாவுக்கே தடை விதிக்கப்பட்டுள்ளது.

(ஜ-6)

# ஆயுதம் வைத்திருந்த சந்தேகத்தில் கைதான 8 பேருக்கும் விடுதலை

கொழும்பு, ஜூலை 6

ஆயுதங்களைக் கொண்டு சென்றனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்த 8 பேர் அது தொடர்பான வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்தில் உள்ள சோதனைச் சாவடியில் பிக்கப் வாகனம் ஒன்று படையினரால் சோதனையிடப்பட்டது. அந்த வாகனத்தில் இருந்து 4 கைக்குண்டுகளும், 100 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன என்று படையினர் தெரிவித்திருந்தனர். அந்த வாகனத்தில் 8 பேரும் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றில் செய்யப்பட்ட பிணை மனுவின் அடிப்படையில் 2004ஆம் ஆண்டு சந்தேகநபர்கள் 8 பேருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டது. இந்த வழக்கு மட்டக்களப்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் 2006ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்தது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், அரச பகுப்பாய்வுத் திணைக்களம் ஆகியவற்றின் அரச தரப்பு சாட்சியங்கள் பெறப்பட்டு எதிர்த்தரப்பு சாட்சியங்களும் பெறப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

இந்த வழக்கின் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எதிரிகளின் பிரத்தியேக உடமைகளில் இந்த ஆயுதங்கள் இருக்காத நிலையிலும், ஆள் அடையாளம் தொடர்பாக அரச தரப்பில் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் உறுதிப்படுத்தத் தவறியதால் மேன்முறையீட்டு நீதிபதி எம்.என்.எம். அப்துல்லா கடந்த 22ஆம் திகதி அனைத்து எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவித்துள்ளார். (எ)

# 17,764 பேர் தனிமைப்படுத்தல் நிறைவு

கொழும்பு, ஜூலை 6

இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து சுமார் 17 ஆயிரத்து 764 பேர் இதுவரைக்கும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்து வெளியேறியுள்ளது என்று கொவிட் மத்திய நிலையம் நேற்று தெரிவித்துள்ளது.

இதேவேளை முப்படை யினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் 50 தனிமைப்படுத்தல் நிலையங்களில் சுமார் 6 ஆயிரத்து 200 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கொழும்பு ஜிந்துபிட்டிய பகுதியில் இருந்து சுமார் 155 பேர் கண்டக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஜூலை 2 இலிருந்து தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக கொவிட் மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# போராட்டத்துக்கு நீதிமன்றத்தால் தடை உத்தரவு

வவுனியா, ஜூலை 6

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்றுக் கவனவீர்ப்புப் பேரணியொன்று முன்னெடுக்கத் திட்டமிட்ட நிலையில் போராட்டத்துக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆயிரம் நாட்களை கடந்து வவுனியா ஏ9 வீதியில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகத்திற்கு அருகாமையில் கொட்டகை அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்றையதினம் சில கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் கவனவீர்ப்புப் பேரணியில் ஈடுபடவிருந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கரும்புலிகள் நினைவு தினத்தினை நினைவுகூர வாய்ப்புள்ளதாக தெரிவித்து வவுனியா பொலிஸார் நீதி மன்றத்தில் தடை உத்தரவைப் பெற்று பேரணியை நிறுத்தினர். (ம-18)

# முன்னாள் ஆயுததாரிகளுக்கு வாக்களித்தால் தொலைவீர்கள்!

## சுட்டிக்காட்டி எச்சரிக்கின்றார் விக்னேஸ்வரன்

**மட்டக்களப்பு, ஜூலை 6**

**“தற்போதைய ஜனநாயக சூழல் சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்வதாகவே காணப்படுகின்றது. எனவே, முன்னர் ஆயுதம் தாங்கியவர்களுக்கு மக்கள் வாக்களிப்பது மக்களுக்குத்தான் ஆபத்தான நிலையை ஏற்படுத்தும்” என்று வடக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளர்களை ஆதரிக்கும் கூட்டமும் தேர்தல் பரப்புரை அலுவலக திறப்பு நிகழ்வும் கிரான்குளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டணியின் வேட்பாளர் சோ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

ஆயுதக் குழுக்களுக்கும் தேசிய கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இடிந்த வீட்டுக்கும் வாக்களிப்பதை மக்கள் தவிர்த்து எமது கட்சியினருக்கு வாக்களியுங்கள்.

கடந்த ஐந்து வருடகாலமாக தமிழ் மக்கள் பல்வேறுவிதமான சிக்கல்களுக்கு முகங்கொடுக்கவேண்டி இருந்ததற்கு காரணம் எங்களுடைய தலைமைத்துவம் சரியாக அமையாமையே.

நூறு வருடகாலமாக திட்டமிட்டு சிறுபான்மையை ஒதுக்கிய ஒரு பெரும்பான்மையினர் இதுவரை காலமும் தாங்கள் செய்துவந்த அந்தக் காரியங்களிலிருந்து பின்வாங்க மாட்டார்கள். இதனை நாங்கள் உணர்ந்துகொண்டிருக்க வேண்டும்.

இன்று ஜனநாயக சூழல் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வதாக தெரிகின்றது. சர்வாதிகாரிகளுடன் கூட்டுச்சேர்ந்துகொண்டு உங்களிடம் வாக்குக் கேட்டு வருபவர்கள் நாளை வென்றார்களானால் சர்வாதிகார பின்னணியிலேயே இவர்களுடைய ஆயுதம் முன்னிலையிலே அதை வைத்துக்கொண்டு உங்களை ஆட்டம் காட்டி விடுவார்கள். எதுவுமே செய்யமுடியாத சூழ்நிலையிலே ஜனநாயகம் என்பது எங்களை விட்டு தூரச்சென்றுவிடும். அதனால் முன்னாள் ஆயுதக் குழுக்களுக்கு வாக்களிப்பதை நிறுத்திக்கொள்ளுங்கள்.

பெரும்பான்மை தேசியக் கட்சிகள் சார்பில் இங்கு போட்டியிடுகின்ற தமிழ் வேட்பாளர்கள் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருப்பவர்கள். அரசு கூறுவதையே அவர்கள் செய்ய வேண்டும். அரசு எதைச் சொல்கின்றதோ அதனைச் செய்துகொண்டு தாங்கள் செய்ய நினைத்ததை தமிழ் மக்களுக்கு செய்ய முடியாத நிலையில்தான் இருப்பார்கள். பெரும்பான்மை சமூகத்துக்கு சிறுபான்மையினரை அடக்கி ஆளவேண்டும் என்ற ஒரு எண்ணம் இருக்கும்போது அந்த வேட்பாளர்களை தங்கள் கைப்பொம்மைகளாக மாற்றி ஆட்டிக்கொண்டிருப்பார்களே தவிர, அவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்ய நினைக்கும் பலவிதமாக விடயங்களைத் தடை செய்துவிடுவார்கள்-என்றார். (கு)

## பெரும் நிதி மோசடியில் ஈடுபட்டது கூட்டமைப்பு

### குண்டுபோடுகிறார் சிவசக்தி ஆனந்தன்

முல்லைத்தீவு, ஜூலை 6

பாதிக்கப்பட்ட மக்களுக்காக கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து புலம்பெயர் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு கொடுத்த நிதியை அந்தக் கட்சி மோசடி செய்துள்ளதாக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டு புதுக்குடியிருப்பில் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டார். அதன் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசின் வரவு செலவுத்திட்டங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கிய கூட்டமைப்பினர் இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவில்லை.

அரசிலிருந்து உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முடியாவிட்டாலும் கூட புலம்பெயர்நாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட நிதியை மோசடி செய்துள்ளார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கிய நிதியைக் கூட பதுக்கியுள்ளார்கள்.

கூட்டமைப்பும் நல்லாட்சி அரசும் தேனும் பாலுமாக இருந்து வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கி மக்களுக்கு அபிவிருத்தியைச் செய்யவில்லை. புலம்பெயர்ந்த நாடுகளில் நிதியைப் பெற்று பதுக்கி வைத்துக்கொண்டு மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று கேள்வி கேட்பதற்கு இவர்களுக்கு எந்தத் தகுதியும் கிடையாது, என்றார். (ஒ.5,19)

## 3 கிலோ கஞ்சா மீட்பு

மன்னார், ஜூலை 6

கிளிநொச்சி மதுவரி திணைக்களத்தினர், மன்னார் உயிலங்குளத்தில் 3 கிலோ கஞ்சாவை நேற்று முன்தினம் மீட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் உயிலங்குளத்தைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவரை நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 11ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஒ.5,26)



# அன்ரன் பாலசிங்கத்தின் செருப்புக்கும் பெறுமதியற்றவர்

### ஒப்பீடுகள் குறித்து கருணா காட்டம்

அம்பாறை, ஜூலை 6

அன்ரன் பாலசிங்கத்தின் செருப்புக்கும் பெறுமதியற்றவர் தான் சுமந்திரன். ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விடுதலை புலிகளின் போராட்டத்தை உலகறியச் செய்த ஒரு இராஜதந்திரி என்று அம்பாறை மாவட்டத்தில் தமிழர் மகா சபை சார்பில் நாடாளுமன்ற வேட்பாளராக போட்டியிடும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி வேட்பாளர் தியாகராசா ஞானேந்திரனை ஆதரித்து கட்சி பணிமனை திறப்பு விழா நேற்று இடம்பெற்ற போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தமிழீழ விடுதலை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கசிங்கத்துக்கு ஒப்பானவர் என தெரிவித்தார். அன்ரன் பாலசிங்கத்தின் செருப்பிற்கும் பெறுமதியற்றவர் தான் சுமந்திரன்.

ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விடுதலை புலிகளின் போராட்டத்தை உலகறியச் செய்த ஒரு இராஜதந்திரி ஆவார். வடக்கு கிழக்கு என்னவென்று தெரியாத சுமந்திரன் கொழும்பிலே வளர்ந்தவர். 75 கள்ள வாக்குகள் போட்டவன் என்று தன் வாயாலே கூறிய ஒருவர்தான் சிறீதரன். அவருக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன.

என்னையும் உரசி பார்க்கின்றனர். தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று பவனி வருவதற்காகவா நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கின்றோம். வேட்பாளர் தெரிவு செய்யும் போது தமிழ் கட்சிகள் வர்த்தகர்களையும், மதுபான சாலை உரிமையாளர்களையும், வட்டிக்கு பணம் கொடுப்பவர்களையும் வேட்பாளர்களாக்கி தெரிவு செய்தால் எவ்வாறு சேவை செய்வார்கள். ஒப்பந்தம் செய்வது எப்படி என்றுதான் சிந்திப்பார்கள். இதை விளங்கி கொள்ளாமல் தேசியம் தேசியம் என்று பேசிக்கொண்டு திரிகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கட்சியில் போட்டியிடுகின்றேன். அம்பாறை தமிழர்கள் மொட்டு கட்சிக்கு வாக்களித்தால் முஸ்லிம் ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்க ஏதுவாக அமையும்.

ஆதலால் தமிழ் மக்கள் மொட்டிற்கு வாக்களிப்பதற்கு பதில் எமக்கு வாக்குகளை வழங்குங்கள், என்றார். (ஒ.5)

# பிரபாகரனின் ஆன்மா மஹிந்த அணியுடன்

### இப்படிச் சொல்கிறது சஜித் அணி



கொழும்பு, ஜூலை 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்தாலும் அவருடைய ஆன்மா பொதுஜன பெரமுனவுடனேயே இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.

அரசிலிருந்த முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவர் தான் பதவியிலிருந்த போது மக்களின் நலனுக்காக எவ்வகையான செயற்பாடுகளை மேற்கொண்டேன் என்பது தொடர்பிலே மக்களிடம் தெரிவிக்க வேண்டும். அதனை விடுத்து தான் இராணுவத்தினரைக் கொலை செய்தேன் என்று கூறி பெருமைப்பட்டு கொள்வதல்ல. இவ்வாறு கூறுவது இவர் இன்னமும் பயங்கரவாதி என்ற எண்ணத்தில் இருப்பதையே உணர்த்துகின்றது என்றும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஒ,5)

# தபால் மூல வாக்களிப்பு அடுத்த வாரம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 6

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



**சுகதாரத்துறையினர்**

சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்களில் மாத்திரம் எதிர்வரும் 13 ஆம் திகதி அஞ்சல் மூல வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சுகாதார மற்றும் மருத்துவ துறையுடன் தொடர்புடைய அரச உத்தியோகத்தர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த மாதம் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை தபால் மூல வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இம்முறை பாராளுமன்ற தேர்தலானது கொரானா தொற்றின் காரணமாக புதியதொரு வழமையான சூழலில் நடைபெறவுள்ளதால் வாக்கெடுப்பு நிலையங்களில் சுகாதார பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் சுகாதாரத்துறை அதிகாரிகள் ஈடுபடவுள்ளதால் அவர்கள் மாத்திரம் வாக்களிப்பதற்கு தனியொரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

**அரச நிறுவன உத்தியோகத்தர்கள்**

அதற்கமைய எதிர்வரும் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் அனைத்து பொலிஸ் நிலையங்கள், பாதுகாப்புப்படைகள், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சுகாதாரப் பிரிவுகள், அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களில் தவிர ஏனைய அரச நிறுவனங்களில் அஞ்சல் மூல வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

**பாதுகாப்புத்துறை, தேர்தல் அதிகாரிகள்**

அஞ்சல் மூல வாக்கெடுப்பு நடைபெறும் வாக்களிப்பு நிலையங்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கும் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய செயலாற்றும் நடவடிக்கைகள் சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்கும் அலுவலர்களை ஈடுபடுத்த நேரிட்டுள்ளமையால் அனைத்து பொலிஸ் நிலையங்கள் , பாதுகாப்புபடை, சிவில் பாதுகாப்பு திணைக்களம், சுகாதாரப் பிரிவுகள், மாவட்ட செயலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களில் அஞ்சல் மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 16, 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் 16 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்ற அதேவேளை 17 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து பகல் 2 வரை மாத்திரமே வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேலதிக தினங்கள்**

மேற்குறித்த தினங்களில் தவிர்க்க முடியாத காரணத்தினால் வாக்களிக்க முடியாமல் போனவர்களுக்கு இம்மாதம் 20 மற்றும் 21 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்த இரு தினங்களும் அத்தாட்சி அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல் அலுவலகத்திலேயே வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு 17 ஆம் திகதி வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(எ)



# ஓகஸ்டுக்கு பின்னர் பட்டதாரி நியமனம்

*சஜித் மீளவும் தெரிவிக்கின்றார்*

திருகோணமலை, ஜூலை 6

பட்டதாரிகளின் நியமனங்கள் இந்த அரசில் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஓகஸ்ட்டுக்கு பின்னர் வெற்றியுடன் பட்டதாரி நியமனங்களை வழங்குவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர்களை ஆதரித்து கிண்ணியா நகர சபை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை ஓகஸ்ட் 5ஆம் திகதிக்குப் பின்னர் சீரமைத்து மக்களிடம் கையளிப்பேன். நாட்டில் சிறுபான்மை என்று ஒன்றில்லை. எல்லோரும் சமமாக வாழ வழிவகுக்க எனது சக்தி ஊடாக முன்னெடுக்க காத்திருக்கிறேன்.

ரணசிங்க பிரேமதாச செய்த ஆட்சியை போன்று அவரின் மகனான சஜீத் பிரேமதாச வாகிய நான் மூவின மக்களுக்கும் சமமான முறையில் சேவைகளை வழங்குவேன் - என்றார். (து)

# கொழும்பு துறைமுக ஒப்பந்தம் மாற்றப்பட்டால் பெரும் நட்டம்

*இப்படிக் கூறுகின்றார் மஹிந்த*

கொழும்பு, ஜூலை 6

கடந்த ஆட்சியின் கீழ் கொழும்புத் துறைமுக நகர ஒப்பந்தம் மாற்றப்பட்டதால் துறைமுக நகரத்தில் இலங்கைக்குச் சொந்தமாக இருந்த பெரும் நிலப்பரப்பை இழந்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச. அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செயற்பாட்டாளர்களை நேற்றுமுன்தினம் மாலை மகிந்த சந்தித்துக் கலந்துரை யாடியுள்ளார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

துறைமுக நகர ஒப்பந்தம் மாற்றப்பட்டதை மீளவும் வழமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எங்கள் அரசாங்கத்தின் கீழ் நாட்டையே வேலைத்தளமாக்கி மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் கடந்த ஐந்து வருடங்கள் முழுமையாக தடைப்பட்டுள்ள நிலையில் கொழும்பு துறைமுக நகர நிர்மாணிப்பு நடவடிக்கையும் இரண்டு வருடங்கள் தடைப்பட்டிருந்தது.

அந்த காலப்பகுதிக்குள் துறைமுக நகர ஒப்பந்தத்தை மாற்றியதால் எங்கள் நாட்டுக்குச் சொந்தமாகவிருந்த நிலப்பரப்பை குறைத்து கடந்த அரசாங்கம் ஒப்பந்தம் தயாரித்துள்ளது. ஒப்பந்தம் மாற்றமடைந்தமையால் துறைமுக நகரத்தின் மூலம் இழந்த நிலப்பரப்பை மீள பெறுவதற்கு தற்போது எமது அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக நாட்டின் அனைத்து பிரதேசத்திலும் அபிவிருத்தி மேற்கொள்வதற்காக ஒரே அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துவதன் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை அதிகரித்து மாகாண மட்டத்தில் அபிவிருத்தியை கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

எங்கள் அரசாங்கத்தின் கீழ் தங்காலை சிறைச்சாலையை அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் தற்போது வரையில் அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேசத்தில் ஓரளவு பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.- என்றார். (எ)

# சிங்களவர்களை பகைத்து இந்த நாட்டில் வாழமுடியா

*மனோ கணேசன் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 6

சிங்கள மக்களை பகைத்துக் கொண்டு நாட்டில் வாழ முடியாது. ஆகையால் தமிழ் மக்கள் அரசியலில் பலம் பொருந்தியவர்களாக இருக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான மனோ கணேஷன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கை பல்லின சமூகம் வாழும் பெரும்பான்மை நாடு. எந்த கட்சி ஆட்சி அமைத்தாலும் அக்கட்சி பெரும்பான்மை சமூகத்துக்கு முன்னுரிமை வழங்குவது சாதாரண ஒரு விடயமாகும். அதைக் குறை கூற முடியாது. ஏனெனில் சிங்கள மக்களே பெரும்பான்மையின் சமூகமாக வாழ்கிறார்கள். இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையும், அரசியல் அந்தஸ்த்தைப் பாதுகாக்கும்ஒரு தேர்தலாகவே காணப்படுகிறது. கடந்த காலங்களை காட்டிலும் நாட்டில் தமிழ் பேசும் மக்களின் நிலை தற்போது எந்த மட்டத்தில் உள்ளது என்பதை புதிதாக எடுத்துரைக்க வேண்டிய தேவை கிடையாது.

சிங்கள மக்களை பகைத்துக் கொண்டு நாட்டில் வாழ முடியாது. இதுவே யதார்த்தமான உண்மை இதற்காக எமது உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது. இதற்கு தமிழ் பேசும் மக்கள் அரசியலில் பலம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். ஏனைய மாவட்டங்களை காட்டிலும் கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மொழி பேசும் ஒருவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து ஒரு அமைச்சராக பதவி வகிப்பது முக்கியமானதொரு விடயாகும். என்றார். (எ)

# கண்டிக்கு வருவார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 6

கண்டி மாவட்ட தமிழ் பேசும் மக்களின் ஆளுங்கட்சி பிரதிநிதித்து வத்தை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கண்டியின் கலஹா மற்றும் ஹந்தான பகுதிகளுக்கும் செல்லவுள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிகண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக அவர் இவ்வாறு செல்கின்றார் என்றும் தெரிவித்தார்.

கண்டியில் முன்னெடுக்கவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளேன் - என்றார். (து)



# புற்றுநோயாளர் நலன்கருதி பேருந்து சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

**இலங்கையில் உள்ள தெல்லிப்பழை, மகரகம, காலி ஆகிய இடங்களில் உள்ள புற்றுநோய் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர், உதவியாளர்கள், உறவினர்கள் மற்றும் பயணிகளின் நலன்கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையினரால் பேருந்து சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

தினமும் இரவு 7.15 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் பேருந்து இரவு 8 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்துக்கு வந்து அங்கிருந்து இரவு 8.15 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் அதிகாலை 4 மணிக்கு மகரகம ஊடாக காலை 7 மணிக்கு காலியைச் சென்றடையும்.

அவ்வாறே காலியிலிருந்து மாலை 4.30.மணிக்குப் புறப்படும் பேருந்து மகரகம ஊடாக யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு வந்து, மறுநாள் காலை 6.40 மணிக்கு காங்கேசன் துறையைச் சென்றடையும் வகையில் பேருந்து சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி மற்றும் அம்பலாங்கொட பேருந்துச் சாலையினர் இணைந்து இந்தச் சேவைகளை வழங்கவுள்ளனர் என வட பிராந்திய பிரதான முகாமையாளர் ஏ.ஆர்.எவ்.அமீன் அறிவித்துள்ளார். (ப-9)

# இனவாதக் கட்சியே பொதுஜன பெரமுன

## முன்னாள் எம்.பி. இம்ரான் மஹரூப் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 6

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்பது தனி இனவாதத்தையும் தனிப்பட்ட குறிக்கோள்களையும் கொண்ட கட்சியாகச் செயற்படுகிறது என்று திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளருமான இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


கடந்த தேர்தல் காலப்பகுதியில் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவே போட்டியிட்டன. தற்போது பல கட்சிகளைக் கொண்ட பல வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் சிறந்த தலைமையாக சஜித் உள்ளார். இந்தத் தேர்தல் எப்படிப்பட்ட தேர்தல் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட சுய தேவைக்கான தேர்தலா? இலாப நோக்கத்துக்கான தேர்தலா? ஒட்டு மொத்த சமுதாயத்துக்கான தேர்தலா? என்பதைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

சஜித் பிரேமதாச மக்களின் பிரச்சினைகளை உணர்ந்தவர். திருகோணமலைக்கு பல தடவைகள் வருகை தந்துள்ளார். மூவின மக்களையும் அரவணைத்துச் செல்வதுடன் வீட்டுத் திட்டங்கள் என பல சேவைகளைச் செய்துள்ளார் - என்றார். (ப)

# அபூர்வ வாழைப்பழம்

கொழும்பு, ஜூலை 6

ரந்தொலுகம பிரதேசத்தைச் சேர்ந்த நபருக்கு அபூர்வ வாழைப்பழம் ஒன்று கிடைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. குறித்த நபர் கடந்த வாரம் வர்த்தக நிலையம் ஒன்றில் கொள்வனவு செய்த வாழைப்பழச் சீப்பில் வித்தியாசமான வாழைப்பழம் ஒன்று கிடைத்துள்ளது. ஒரு வாழைப்பழத்திற்குள் தோடம்பழச் சுளைகள் போன்று 8 பழங்கள் காணப்பட்டன. இதனை குறித்த நபர் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்துள்ளார். (ஐ)



# சிறுபான்மை இனத்தின் பாதுகாவலன் சஜித்!

## அமீர் அலி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 6

வரவுள்ள நாடாளுமன்றத்தில் கூடுதல் ஆசனங்களைப் பெற்று சஜித் பிரேமதாசாவை சக்திமிக்க தலைவராக தெரிவு செய்து பிரதமராக்குவோம். இவரை சிறுபான்மைச் சமூகத்தைப் பாதுகாக்கின்ற தலைவனாக நாங்கள் நம்புகின்றோம் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிறுபான்மைச் சமூகத்தின் தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொள்கின்ற போராட்டம் என்ற அடிப்படையிலே இந்த நாட்டின் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் நம்பக்கூடிய தலைமையாக சஜித் பிரேமதாச இருக்கின்றார். கடந்த காலத்தில் எமது சமூகங்களுக்கு ஏற்பட்டுப்போன பின்னடைவுகள், பிரச்சினைகள் எல்லாவற்றிலும் எங்களைத் துவம்சம் செய்ய முற்பட்டபொழுது இந்தக் கட்சியும், தலைமையும் சிறுபான்மை சமூகத்தைப் பாதுகாக்க செயற்பட்டதை மறந்து விடாதீர்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்தாக அதிக வாக்குகளைப் பெறுகின்ற கட்சி ஐக்கிய மக்கள் சக்தி என்பதை மறந்து விடாதீர்கள். சிறுபான்மை மக்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணுகின்ற ஒரு தலைவரின் கீழே நாங்கள் ஒன்று திரண்டுள்ளோம். எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும் என்பதற்காக முஸ்லிம் தலைமைகள், தமிழ்த் தலைமைகள் .ஒன்றிணைந்து சஜித் பிரேமதாசவை வலுப்படுத்தி எதிர்காலத்தில் சக்தி மிக்க தலைவராக பிரதமராக்குவோம் - என்றார். (ப-150)

# 883 கடற்படையினர் தொற்றிலிருந்து மீள்வு

கொழும்பு, ஜூலை 6

கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 883 ஆக உயர்ந்துள்ளது. ஏற்கனவே 879 பேர் குணமடைந்திருந்த நிலையில் மேலும் 4 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

அதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 74 ஆக உயர்ந்துள்ளது. அவர்களில் ஆயிரத்து 885 பேர் குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வெளியேறியுள்ளனர். 178 பேர் நாட்டிலுள்ள 11 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை 46 பேர் கொரோனாத் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மருத்துவமனைக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கையில் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர். (எ)

# பத்தரமுல்ல பண்டி பொலிஸின் பிடியில்

கொழும்பு, ஜூலை 6

பாதாளக் குழுத் தலைவர் அங்கொட லொக்கா என்பவரின் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரிடம் இருந்து ஹெரோய்ன் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நபர் பத்தரமுல்ல பண்டி என்று அழைக்கப்படுபவர் என்றும், சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)



# இனவாத வேட்பாளர்களை புறக்கணிக்க வேண்டும்!

## சுமணரட்ன தேரர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 6

இனவாத சிந்தனையுடன் களமிறங்கியுள்ள வேட்பாளர்களை இனங்கண்டு, மக்கள் புறக்கணிக்க வேண்டும் என மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரட்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இன்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்தான் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.



குடிக்க நீர் கூட இல்லாமல் சில குடும்பங்கள் காணப்படுகின்றன.

இவை தொடர்பாக அக்கறை கொள்ளாமல் இருக்கும் அரசியல்வாதிகள், இனவாதத்தையும் மதவாதத்தையுமே மக்கள் மனங்களில் விதைத்து வருகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகளால் எந்தக் காலத்திலும் மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியாது.

இனவாதத்தைத் தோற்றுவிக்கும் முகமாக பிரபாகரனைக் காட்டி வாக்குக் கேட்டு நாடாளுமன்றம் சென்ற உறுப்பினர்கள், மக்களுக்காக செய்தது என்ன என்று கேட்க விரும்புகிறேன். வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், ஒரு நேரத்தில் தன்னை ஜனநாயகவாதியாகவும் இன்னொரு நேரத்தில் தன்னை ஒரு அடிப்படைவாதியாகவும் காண்பிக்கிறார். இவ்வாறானவர்கள் நாடாளுமன்றம் சென்று மக்களின் உரிமையை எவ்வாறு பெற்றுக் கொடுப்பார்கள்?. இதை மக்கள் சிந்திக்க வேண்டும் - என்றார். (எ)

# கோத்தா மொட்டு மோதல் உக்கிரம்!

கொழும்பு, ஜூலை 6

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் 'வியத்மக' உறுப்பினர்களுக்கும், மொட்டுக் கட்சியின் உறுப்பினர்களுக்குமிடையில் மோதல் ஆரம்பித்துவிட்டது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சியான மௌபிம மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ராஜபக்ச குடும்ப உறுப்பினரான நிபுண ரணவக்க மொட்டுச் சின்னத்தில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார். மாவட்டத்தில் அவரை முதலிடத்துக்குக் கொண்டு வருவதற்காக ராஜபக்சக்கள் முயற்சிக்கின்றனர். தங்கையின் மகனுக்காக சிறப்புப் பிரசாரக்குழுவும் அனுப்பட்டுள்ளது. அம்மாவட்டத்திலுள்ள ஏனைய அரசியல்வாதிகளை ஓரங்கட்டுவதே இதன் நோக்கமாகும். கோத்தாபய நல்லவர், மஹிந்த ராஜபக்ச பொல்லாதவர் என்ற தொனியிலேயே சமூகவலைத்தளங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. பொதுவெளியில் கோத்தாபய ராஜபக்சவுக்கு சார்பாகவே மஹிந்தவும் பிரசாரம் செய்கின்றார். ஆனால் உள்ளே என்ன நடக்கின்றது என்பது எமக்குத்தான் தெரியும். அதே வேளை, கோத்தாபய ராஜபக்சவுக்கு அரசியல் அனுபவம் இல்லை. இராணுவ அனுபவமே இருக்கின்றது. போர் வியூகம் தெரிந்தாலும் அரச நிர்வாகம் தெரியாது. இதனால் அவருக்கு வாக்களித்தவர்கள் கலக்கமடைந்துள்ளனர். எம்முடன் இணைவதற்கு தயாராகிவிட்டனர் - என்றார். (ப-44)



## சுற்றிவளைப்பில் 470 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 6

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றி வளைப்பில் போதைப்பொருள்களுடன் 470 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து ஹெரோய்ன், கஞ்சா மற்றும் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட போதைப்பொருள்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேல் மாகாணத்தின் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோனின் ஆலோசனையின் அடிப்படையில் நேற்று காலை 6 மணி முதல் மாலை 5 மணிவரை சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவற்றைத் தவிர வேறு குற்றங்கள் இழைத்த 23 பேரும் கைது செய்யப்பட்டவர்களுள் அடங்குகின்றனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ஏ)




## வெள்ளவத்தையில் பெரும் தீ விபத்து!

கொழும்பு, ஜூலை 6

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் கடைத்தொகுதி ஒன்றில் இன்று மதியம் தீ விபத்தொன்று இடம்பெற்றுள்ளது. வெள்ளவத்தை, ஸ்ரேசன் வீதியை அண்மித்த பகுதியில் உள்ள புடவைக் கடைத் தொகுதியொன்றிலேயே இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது. பொலிஸார் மற்றும் தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டனர். தீவிபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஏ)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** மண்கும்பான், மண்கும்பான் விடுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, அல்லைப்பிட்டி, வெண்புரவிநகர், பும்புகார், மண்டைதீவு, மண்டைதீவு கடற்படை முகாம், மண்கும்பான் கடற்படை முகாம், பருத்தித்துறை VM வீதி 1வது சந்தி, பருத்தித்துறை கல்லூரி வீதி, சாளம்பை, தம்பசிட்டி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்** சமனன்குளம், தந்திரிமலை வீதி, சின்ன சிப்பிக் குளம், கிறிஸ்தவகுளம், புளியங்குளம்', அரசடிகுளம், காந்திநகர், வாரிக்குட்டியூர், சங்கரபுரம், மடுச்சந்தி, கட்டையடம்பன், இசைமலைத்தாழ்வு, தம்பனிக்குளம், பண்ணைவெட்டுவான், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன் முருங்கன் விதை பண்ணை ஆகிய இடங்களிலும்,

**மன்னார் மாவட்டத்தில்** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களில் காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணி வரையான காலப்பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில் இரண்டு மணித்தியாலங்களும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## துருக்கி கடற்படை இலங்கை வருகை

கொழும்பு, ஜூலை 6

காலி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பலில் சேவையாற்றுவதற்காக துருக்கியில் இருந்து 24 கடற்படையினர் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். துருக்கியின் செடான் நகரில் இருந்து சிறப்பு விமானம் ஒன்றின் மூலம் அவர்கள் நாட்டை வந்தடைந்தனர். இவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பீ.சீ.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ)

## இன்றைய நாள்

**மேடம்:** தாழ்வு மனப்பான்மை நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். பூர்வ சொத்து சம்மந்தமாக பேச்சுவார்த்தைகள் நல்ல படியாக முடியும்.

**இடபம்:** உங்களை பற்றிய விமர்சனங்களைப் பற்றி பொருட்படுத்தாதீர்கள். அலுவலகத்தில் முன்கோபத்தைக் குறைத்துக் கொண்டால் அது பலவகையில் நன்மை தரும்.

**மிதுனம்:** அலுவலக வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். அக்கம் பக்கத்தினர் நயமாகப் பேசினாலும் பெண்கள் தங்கள் சொந்த விஷயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

**கடகம்:** புதிய வேலையில் சேருவதற்கான வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மாமன் வழி உறவுகளால் நன்மை பெறுவீர்கள். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு இனிப்பான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** அரசாங்க விஷயங்கள் சிறு தாமதத்துக்குப்பிறகே முடியும். அலுவலகரீதியாக வெளியூர் பயணங்களை மேற்கொள்ள வேண்டிவரும். சொத்து வாங்குவது, விற்பது சம்பந்தமாக நல்ல முடிவை எடுப்பீர்கள்.

**கன்னி:** அலுவலகத்தில் நிறை, குறைகள் இருக்கும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கர்ப்பிணிகள் உணவு விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

**துலாம்:** அலுவலகப் பணத்தை கையாளும்போது கவனத்துடன் இருப்பது அவசியம். வழக்கு விஷயங்களில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரும். தாயார் உடல்நலம் காரணமாக சிறு சிறு அலைச்சல்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** சுபநிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நல்லபடியாக நடக்கும். தந்தையிடமிருந்து உதவிகள் கிடைக்கும். உடல் நலத்திற்கு சிகிச்சை உதவும். சீரான ஓய்வு உடல் நலம் பெற உதவும்.

**தனுசு:** வாடிக்கையாளர்களிடம் கனிவாக பேசினால் அது வியாபாரம் செழிக்க உதவும். பெண்களின் விருப்பங்கள் எளிதாக நிறைவேறும். போக்குவரத்தில் கவன நடை நல்லது.

**மகரம்:** பிள்ளைகளின் திருமணம் பற்றி யோசிப்பீர்கள். கைமாற்றாக கொடுத்த பணம் கைக்கு வரும். பெண்களுக்கு பிறந்த வீட்டிலிருந்து உதவி கிடைக்கும்.

**கும்பம்:** மனதில் உற்சாகமும் செயல்களில் நேர்த்தியும் நிறைந்திருக்கும். எதிர்பாராத விதமாக தனவரவு சற்று குறையும் சகோதர வகையில் உதவிகள் உண்டு.

**மீனம்:** கணவன், மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும். அலுவலகப் பிரச்னைக்கு தீர்வை சொல்லி மேலதிகாரியின் அன்புக்குப் பாத்திரமாவீர்கள்.

# உரிமையில்லாத அபிவிருத்தியால் தமிழ் மக்களுக்கு பயனேதுமில்லை

## த.தே.கூ வேட்பாளர் உதயகுமார் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 6
தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் உரிமை இல்லாதபோது எமக்காக அரசால் மேற்கொள்ளப்படுகின்ற எவ்வகையிலான அபிவிருத்தியானாலும் அவற்றால், ஒரு முழுமையான பயனை நாம் ஒருபோதும் அனுபவிக்கமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் த.தே.கூட்டமைப்புக்கு எதிராகப் போட்டியிடுகின்ற கட்சிக் காரர்கள் தாங்கள் வெற்றி பெற்றால் மட்டக்களப்பு மாவட் டத்துக்கு முழுமையான அபிவிருத்தியையும் வேலையற்ற இளைஞர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்தித் தருவதாகப் பொய்யான, போலியான, உறுதி மொழிகளை வழங்கி வருகின்றார்கள். இந்தக் கட்சிகளின் ஒரே நோக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற இருக்கிற ஆசனங்களின் எண்ணிக்கையை எப்படியாவது சிதைத்து கூட்டமைப்பின் பலத்தைக் குறைக்கவேண்டும் என்பதேயா கும். கூட்டமைப்புக்கு எதிராக போட்டியிடுகின்ற தமிழ்க் கட் சிகளுக்கு நீங்கள் அளிக்கின்ற வாக்குகள் பல பிரிவு களா கப் பிரிவதால் தமிழர்களுக்கான பிரதிநித்துவம் இழக்கப் படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். ஆகையால் தமிழ் மக் கள் சிந்தித்து வாக்களியுங்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பலத்தைக் குறைத்தால் தமிழ் மக்களை தேசியத்தின் பால் அக்கறை இழந்தவர்களாகவும் இலங்கை அரசின் செயற்பாடுகளை ஆதரிப்பவர்களாகவும் சர்வதேசத்துக்குக் காட்டி ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இலங்கை அர சுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நல்லிணக்க நீதிப் பொறி முறையை இல்லாது ஒழிக்கவும் சர்வதேச தலையிட்டுடனான அரசியல் தீர்வு புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் என்பவற்றை இல்லாமல் செய்வதுமே ராஜபக்ஷகளது திட்டம். இதனால் அவர்களது நிகழ்ச்சி நிரலின்படி சிங் கள பேரின வாத பௌத்த ஆட்சியை இலங்கையில் மேலோங்கச் செய்வ தற்கான நடவடிக்கைகள் அதிதீவிரமாக மேற்கொள்ளப்படும் என்பதனை மறக்காதீர்கள் -என்றார். (ப)

# தொல்பொருள் என்ற போர்வையில் கிழக்கு மக்களின் காணிகள் பறிப்பு

## முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் குற்றச்சாட்டு

**திருகோணமலை, ஜூலை 6**
**தொல்பொருள் என்கின்ற போர்வையில் கிழக்கில் பொத்துவில் தொடக்கம் திருகோணமலை புல்மோட்டை வரையில் காணிகளை அளவீடு செய்து அப கரிக்க முற்படுகிறார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
11 பேர் கொண்ட குழுவில் ஒரு முஸ்லிமோ தமிழரோ இல்லை சஜித் பிரேமதாச சிங்கள மொழி, தமிழ் மொழி என்பவற்றுக்குரிய கௌரவமளிக்கும்வகையில் இன வாதமற்ற அரசியல் கலாசாரம், இன ஒற்றுமையை வலியுறுத்து வதுடன் இன நல்லிணக்க ஆட் சியை விரும்புபவர்.
சேருவில பன்சலை 2150 வரு டங்கள் பழைமை வாய்ந்தது. இதனை அங்குள்ள முஸ்லிம்க ளும் தமிழர்களுமே பாதுகாத் தார்கள்.
இனவாதத்தைத் தூண்டும் ஆட் சியாளர்களுக்குப் பின்னால் நிற்காமல் நல்லதொரு சிந் தனை கொண்ட சஜித் போன்ற தலைவனோடு ஒருங்கிணைந்து அகில இலங்கை மக்கள் காங்கி ரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ், ஜாதிக கெல உரிமய, மலை யக மக்கள் முன்னணி போன்ற கட்சிகள் செயற்படுகின்றன.
பௌத்த தர்மத்தை மதிப்பதுடன் இந்த நாட்டில் இனவாதம் என்ற ஒன்று இல்லை அனைவரும் சமன் என்ற எண்ணக் கருவி னைக் கொண்ட தலைவனாகச் சஜித் பிரேமதாச செயற்பட்டு வரு கிறார்-என்றார். (ப)

# 290 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூலை 6
கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக பஹ்ரேனில் சிக்கியிருந்த 290 இலங்கையர்கள் தற்போது நாடு திரும்பியுள்ளனர். ஸ்ரீலங்கன் விமான சேவைக் குச் சொந்தமான விசேட விமானத்தின் மூலம் இவர் கள் அழைத்துவரப்பட்டனர்.
நேற்று காலை 6 மணியளவில் அவர்கள் கட்டுநா யக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர் களுக்கு விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டன. 14 நாள்கள் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# முத்துமாரி அம்மன் தேர்த் திருவிழா

புதுக்குடியிருப்பு, ஜூலை 6
புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் சிரட்டை பறிச் சான் முத்துமாரி அம்மன் ஆலய வரு டாந்த தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.
இதன்போது அம்மன் தேரில் எழுந்தருளி வீதியுலாவந்து மக்களுக்கு அருள் பாலித் தார். இதன்போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேர் இழுத்ததுடன், தூக்குக் காவடி,பாற்செம்பு எடுத்து தங்கள் நேர்த் திக்கடன்களை நிறைவேற்றினர். (ஐ-19)

# வாகனங்களை கையளிக்காத முன்னாள் எம்.பிக்கள்

கொழும்பு, ஜூலை 6
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்க ளால் இதுவரை கையளிக்கப்படாத 13 வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர். தேசிய தேர்தல் கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அதி காரிகளுக்கு இது தொடர்பான ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளது என்று உயர்மட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள் ளார்.
பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்து வப்படுத்தி இந்தமுறை தேர்தலில் களமிறங் கும் சில வேட்பாளர்களிடமுள்ள 13 வாக னங்கள் இதுவரை கையளிக்கப்படவில்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தம் வசமுள்ள வாகனங்களை உடனடியாகக் கையளிக்குமாறு தனிப்பட்ட முறையில் ஏனைய வேட்பாளர்களுக்கு அறிவிக்கப்பட் டுள்ளது என்று பொலிஸார் கூறியுள்ளனர்.
இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவில் கலந்துரையாடப்படவுள் ளது. இதற்காக அந்த அமைச்சுகளின் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (எ)

# மலையக மக்கள் முன்னணி மலையக மக்களுக்கான கட்சியே

## கட்சியின் பிரதிச் செயலர் தெரிவிப்பு

ஹற்றன், ஜூலை 6
மலையக மக்கள் முன்னணி யென்பது தனிக்குடும்பத்துக்கு ரிய கட்சி கிடைசொத்தல்ல. அது மலையக மக்களுக்கான கட் சியே. இவ்வாறு மலையக மக் கள் முன்னணியின் பிரதிச் செய லாளர் நாய கம் பேராசிரியர் விஜயசந்திரன் தெரி வித்தார்.
ஹற்றனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மலையக மக்கள் முன்னணி யின் இரு பிரதான அமைப்புக ளான கவுன்சில், மத்தியகுழு என்பவை தற்போதைய தலைவ ருக்கு விலை போய் விட்டதாக அனுசா சந்திரசேகரன் தெரிவித் துள்ளார்.
மலையக மக்கள் முன்னணி யின் உயர்பீட உறுப்பினர்கள் எவருக்கும் விலை போகக்கூடிய வர்கள் அல்லர். கொள்கையின் அடிப்படையிலும், மலையக மக்க ளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் ஒன்றி ணைந்தவர்கள்.
மலையக மக்கள் முன்னணி யின் தலை வராக இருந்த சாந் தினி சந்திரசேகரன், உயர்பீடம் எடுத்த முடிவுக்கு எதிராகச் செயற் பட்டார். மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கி, மலை யக மக் கள் முன்னணியை தோற்கடிக்க முயற்சித்தார். ஆனால், இரண்டு நாடாளுமன்ற ஆசனங்களை கட்சி கைப்பற்றியது.
அனுசா சந்திரசேகரன் கட்சிக்கு வந்த நாள் முதல் கட்சியுடனும், உயர்பீட உறுப்பினர்களுடனும் முரண்பட்ட நிலையிலேயே செயற்பட்டார்.
அவரது தாயார் அன்று செய்த பிழையை இன்று அனுசா செய் துள்ளார். நுவரெலியா மாவட்டத் தில் தனித்து போட்டியிட்டு மலை யக மக்கள் முன்னணியை தோற் கடிக்கும் நோக்கில் செயற்படுகி றார். அவரின் உரைகள் இத னையே உணர்த்துகின்றன- என்றார். (ஐ)

# மாலைதீவிலிருந்து இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொரோனா தொற்று நிலைமை காரணமாக மாலைதீவில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 120 பேர் தற்போது நாடு திரும்பியுள்ளனர். அவர்கள் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்குச் சொந்தமான சிறப்பு விமானத்தில் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்த டைந்தனர். அவர்களுக்கு விமான நிலையத் தில் வைத்துப் பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்படும் என்றும், அவர்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -12 கோவில் வீதியில் ஆதன இலக்கம் 246/6 என்ற இலக்கம்கொண்ட ஆதனமானது - கந்தையா கனகசபாபதி என்ற பெயரிலே ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

" ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் " நிலப்பரப்பு 09 குளி 12.01 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை இல.46 Blakes Avenue, New Malden, Surrey KT3 6RL United Kingdom என்ற முகவரியில் வசிக்கும் நவரத்தினம் சந்திரமோகனும் பெண் திலகவதியும் முதலாம் புறமாகவும் செல்லையா செல்வ ராஜனும் பெண் சாந்தியும் இரண்டாம் புறமாகவும் கனகசபாபதி விக்கினேஸ்வரன் என்பவர் மூன்றாம் புறமாகவும் மேற்குறித்த முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் புறத்தவர்கள் தமது அற்றோனித்தத்துவக்காரரான சிவலிங்கம் உருத்திரலிங்கம் மூலம் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 7002 ஆம் இலக்கத்தில் 07.01.2012 ஆம் திகதியன்று நிறை வேற்றப்பட்ட பிரிவிடல் உறுதி மூலம் பிரிவிடப்பட்டுள்ளதுடன் குறித்த பிரிவிடல் உறுதியில் ஆதன வரலாற்றுப் பகுதியில் முன்னைய உறுதிகள் நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலைகள் காரணமாக தேடுதல்கள் செய்தும் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனக் குறிப் பிட்டுள்ளனர்.

குறித்த பிரிவிடல் உறுதியின் மூலம் நிலப்பரப்பு 2 குளி 8.362 என்ற ஆதனத்திற்கு உரித்தாளரான 46 Blakes Avenue, New Malden, Surrey KT3 6RL, United Kingdom என்ற 3 முகவரியில் வசிக்கும் செல்லையா செல்வராஜா மற்றும் பெண் சாந்தி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்கரான சிவலிங்கம் உருத்திர லிங்கம் - மூலம் பிரசித்த நொத்தாரிசு திருமதி ச.இளங்கோவன் முகதாவில் 9002 ஆம் இலக்கத்தில் 27.07.2013ம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தை கனகசபாபதி விக்கினேஸ்வரன் என்பவருக்கு நன்கொடை அளித்திருந்தனர்.

மேற்குறித்த கனகசபாபதி விக்கினேஸ்வரன் பிரசித்த நொத்தாரிசு திருமதி ச. இளங்கோவன் முகதாவில் 10921 ஆம் இலக்கத்தில் 18.02.2015 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்டு அறுதி உறுதியின் மூலம் ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித் தறையும் நில. பர 6 குளி 8.330 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை Rubins (Pvt) Ltd சிவலிங்கம் உருத்திரலிங்கம், உருத்திரலிங்கம் செந்தூரன், திருமதி அனுதாமா ஜெய்ராம் ஆகியோருக்கு அறுதியாக விற்றிருந்தார்.

No 46, Blakes Avenue New Malden Surrey KT3 6 RF United Kingdom இல் வசிக்கும் நவரத்தினம் சந்திரமோகன் மற்றும் பெண் வைத்தியர் திலகவதி ஆகியோர் தமது அற்றோணித்தத்துவக்காரரான கிருபானந்தன் கோபால ரட்ணம் என்பவர் மூலம் "ராஜசிங்க பனிக்கன்வளவும் புளிய டித்தறையும் " நில.பர 3 குளி 3.74 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தின் ஒரு பகுதியான நில.பர 1 குளி 11.33 என்ற விஸ்தீரணத்தை பிரசித்த நொத்தாரிசு புவீந்திரன் றெக்னோ முகதாவில் 08 ஆம் இலக்கத்தில் 28.08.2016 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட அறுதியுறுதியின் மூலம் ஜோர்ஜ் சார்ள்ஸ் மற்றும் பெண் ராகினி ஆகியோரிற்கு அறுதியாக விற்றிருந் தார்.

மேற்கூறிய நவரத்தினம் சந்திரமோகன் மற்றும் பெண் வைத்தியர் திலகவதி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரரான கிருபானந்தன் கோபாலரட்ணம் என்பவர் மூலம் "ராஜசிங்கம் பனிக்கன் வளவும் புளியந்தறையும்"" நி.பர 3 குளி 3.741 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தில் ஏற்கனவே மேற்குறித்தவாறு அறுதி விற்று மிகுதி நிலப்பரப்பு 1 என்ற விஸ்தீரணத்தை பிரசித்த நொத்தாரிசு புவீந்திரன் றெக்னோ முகதாவில் 09 ஆம் இலக்கத்தில் அம்பிகாதேவி இராஜரட்ணம் என்பவருக்கு 2016.08.29ம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியின் மூலம் அறுதியாக விற்றிருந்தனர்.

மேற்குறித்தவாறு குறித்த நவரத்தினம் சந்திரமோகன் மற்றும் பெண் வைத்தியர் திலகவதி ஆகியோரிடமிருந்து ஆதனங்களை கொள்வனவு செய்தவர்களான ஜோர்ஜ் சார்ஸ் மற்றும் பெண் ராகினி என்பவர்கள் முதலாம் புறத்தவர்களாகவும் அம்பிகா தேவி இராஜரட்ணம் என்பவர் இரண்டாம் புறத்தவர்களாகவும் இணைந்து "ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் " நிலபரப்பு 3குளி 6.893 என்ற விஸ்தீரண முடைய ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு விக்கினராஜன் ஜெயந்தா முகதாவில் 98ஆம் இலக்கத்தில் 07.01.2018 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட பிரிவிடல் உறுதியின் மூலம் பிரிவிடல் செய்து கொண்டனர்.

மேற்குறித்த பிரசித்த நொத்தாரிசு புவீந்திரன் றெக்னோ அவர்களால் 08 ஆம் இலக்கத் தில் நிறைவேற்றப்பட்ட அறுதியுறுதியில் ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித் தறையும் நிலப்பரப்பு 3குளி 3.741 என்பது

நிலப்பரப்பு 3குளி 6.893 எனவும் கிணற்றில் அரைவாசியும் 1 என்பதும் சேர்க்கப்படாத காரணத்தினால் குறித்த தவறுகளானது திருத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு ஜோர்ஜ் சார்ள்ஸ் மற்றும் பெண் ராகினி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சுகன்யா கணேச லிங்கம் முகதாவில் 14.02.2018ம் திகதியன்று 192ம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியானது நிறைவேற்றப்பட்டிருந்தது.

மேலும் பிரசித்த நொத்தரிசு புவீந்திரன் றெக்னோ அவர்களால் 09 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியிலும் மேற்குறித்தவாறான தவறுகள் காணப்பட்டமை யினால் குறித்த ஆதனத்தைகொள்வனவு செய்தவரான அம்பிகாதேவி இராஜரட்ணம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சுகன்யா கணேசலிங்கம் முகதாவில் 12.02.2018 ஆம் திகதியன்று 193 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் திருத்தம் செய்து வெளிப்படுத்தியிருந்தார்.

குறித்த அம்பிகாதேவி இராஜரட்ணம் மேற்குறித்தவாறு திருத்தங்களை செய்து வெளிப் படுத்தியிருந்த போதும் பிரசித்த நொத்தாரிசு விக்கினராஜா ஜெயந்தா அவர்களால் 98 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் காணப்பட்ட தவறுகள் பிரசித்த நொத் தாரிசு சுகன்யா கணேசலிங்கம் முகதாவில் 193ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் வெளிப்படுத்தப்படாததன் காரணத்தினால் பிரசித்த நொத்தாரிசு மேனகா ஜீவதர்சன் முகதாவில் 1431 ஆம் இலக்கத்தில் 16.01.2019 ஆம் திகதியன்று நிறை வேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியின் மூலம் திருத்தி வெளிப்படுத்தல் உறுதியொன் றினை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த அம்பிகாதேவி இராஜரட்ணம் பிரசித்த நொத்தாரிசு சாரா ஜோர்ஜ் முகதாவில் 16.01.2019 ஆம் திகதியன்று 06ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியின் மூலம் ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நி.பர 01 குளி 9.00மற்றும் நி.பர 0குளி 7.77 என்ற விஸ்தீரணமுடைய ஆதனங்களை பழனித்துரை பரிமளம் என்பவருக்கு அறுதியாக விற்றிருந்தார்.

குறித்த ஜோர்ஜ் சார்ள்ஸ் மற்றும் பெண் ராகினி ஆகியோர் ராஜசிங்கம் பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நிலபரப்பு01 குளி 7.90 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சாரா ஜோர்ஜ் முகதாவில் 14 ஆம் இலக்கத்தில் 27.02.2019ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதியின் மூலம் பழனித் துரை கைம்பெண் பரிமளம் என்பவருக்கு நன்கொடையளித்திருந்தனர்.

குறித்த கனகசபாபதி விக்கினேஸ்வரன் என்பவருக்கு செல்லையா செல்வராஜா மற்றும் பெண் சாந்தி ஆகியோர்களால் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இங்கோவன் முகதாவில் 9002ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் நன்கொடை யளிக்கப்பட்ட இராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நிலப்பரப்பு 2 குளி 8.362 என்ற ஆதனத்தை குறித்த கனகசபாபதி விக்கினேஸ்வரன் பிரசித்த நொத்தாரிசு தர்சினி கனகசபாபதி முகதாவில் 02.03.2019ம் திகதியன்று 433ம் இலக்கத்தில் நிறை வேற்றப் பட்ட உறுதியின் மூலம் ஏற்றுக்கொண்டு ஓர் ஏற்பு உறுதியை நிறைவேற்றி னார்.

இல 114/1 கோவில் வீதி யாழ்ப்பாணம் தற்போது No 46, Blakes Avenue,New Amldan, Surrey, KT3 6RL, United Kingdom இல் வசிக்கும் கனகசபாபதி விக்கி னேஸ்வரன் என்பவர் ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியந்தறையும் நிலப்பரப்பு 6குளி 8.330 என்ற விஸ்தீரனமுடைய ஆதனத்தில் தனக்குள்ள உரித்தை பிரசித்த நொத் தாரிசு கனகசபாபதி தர்சினி முகதாவில் 02.03.2019ஆம் திகதியன்று 434ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியின் மூலம் கைதுறப்புச் செய்திருந்தார்.

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதியப்பட்டதும் இல8 நல்லூர் குறுக்கு வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளதுமான Ruhlins (PVT) LTD என்ற நிறுவனமானது பிரசித்த நொத்தாரிசு சாரா ஜோர்ஜ் முகதாவில் 08.03.2019 ஆம் திகதியன்று 17ஆம் இலக்க நிறைவேற்றப்பட்ட உறுதியின் மூலம் இராஜலிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நிலப்பரப்பு 6 குளி 8.330 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை பழனித்துரை கைம்பெண் பரிமளம் என்பவருக்கு அறுதியாக விற்றிருந்தனர்.

**ஆதன விபரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று இறை "இராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும்" நில.பர ஆறு குளி எட்டு தசம் மூன்று மூன்று

**கிழக்கும் வடக்கும்:-**
உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் S.நிர்மலேந்திரன் அவர்களால் 23.05.2007ஆம் திகதி 888ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நில அளவைப் படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட Dr.நவரெட்ணம் சந்திரமோகன் பெண் திலகவதிக் குரிய ஆதனம்.

**மேற்கு:-**
மாப்பாண முதலியாரும் கஜேந்திரன் பெண் மகேஸ்வரியினதும் ஆதனம்.

**தெற்கு :-** காசிப்பிள்ளை பெண் நாகேஸ்வரியினதும் கந்தையா கனகரட்ணத்தினதும் ஆதனம்.
இதடங்கலும்.

இவ்வாதனம் தொடர்பான ஆரம்ப தாயுறுதியான 07.01.2012 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ச.இளங்கோவன் முகதாவில் 7002 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் தாயுறுதி எதுவும்

குறிப்பிடாமை காரணமாகவும், குறுகிய காலத்தினுள் இவ்வாதனம் தொடர்பில் ஏராளமான உறுதிகள் நிறைவேற்றப்பட்டமை காரணமாகவும் இப்பத்திரிகை பிரசுரம் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு அறிவித்தல் தரப்படுகின்றது.

தற்போது பழனித்துரை பரிமளம் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தரு மாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பழனித்துரை பரிமளம் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

துஈசன்
பதில் முதல்வர்
மாநகரசபை

(in.13133) (13.17)

# காற்றோடு கலந்த கனவு...

## மோகன் ஆகாஷன்



தோற்றம் 21 . 11 . 1997

மறைவு 05 . 07 . 2020

இறைவன் படைத்து இயல்புகெடாமல்
தொடரும் பட்டியலில்
ஆகாஷ் – உங்கள் சிரிப்பு
என்றும் நிலைத்திருக்கும்....

உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.


யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் வேம்படி மகளிர் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியரும் எமது குடும்ப நண்பருமாகிய மோகன் - கௌரி தம்பதிகளின் ஒரே புதல்வன் மொறட்டுவ பல்கலைக்கழக மாணவனும் சிறந்த மேசைப்பந்தாட்ட விளையாட்டு வீரனுமாகிய செல்வன் ஆகாஷன் அவர்களின் அகாலமறைவுச் செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்துள்ளோம்.

அன்பும் பண்பும் எல்லோரையும் மதிக்கும் உயர்ந்த உள்ளம் கொண்ட செல்வன் ஆகாஷ் அவர்களை இழந்து நிற்கும் அவருடைய குடும்பத்தினருக்கு நெஞ்சு கனத்த இதயத்துடன் எமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்.....

மங்கையக்கரசி நாகராஜா – நோர்வே,
நாகராஜா மகேசன் - (பாலா) – பிரான்ஸ்,
வாசுகி ரமேஸ் - நோர்வே,
நாகராஜா விஜயகுமார் - (சங்கர்) – சுவிஸ் - 0041 77 922 03 14
நாகராஜா சூரியகுமார் - (சூரி) – நோர்வே,
நாகராஜா உதயகுமார் - (ஜனகன்) –சுவிஸ்,

# மாற்றுத் தலைமைகளும் வாக்குப் பிரிப்புகளும்




திருமுருகன்

ஆயுதப் போராட்டம் இந்தத் தீவில் முகிழ்ந்த காலம். ஆயுதங்களைத் தூக்க வல்லமையுடையோர் பல குழுக்களாகப் பிரிந்து ஆயுதங்களை ஏந்தினர். சிறிலங்கா இராணுவத்துடனான போரை அந்தப் பல குழுக்களுக்கும் தனித்தும் கூட்டாகவும் நடத்தியிருந்தன. கால ஓட்டம் அந்தக் குழுக்களுக்கு இடையிலான மோதலை ஏற்படுத்தியது. தாம் வரித்துக் கொண்ட கொள்கையில், எடுத்துக் கொண்ட இலட்சியத்தில் எந்த விட்டுக்கொடுப்பும் கொடுக்காத இயக்கம் தமிழரின் ஏக பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களைத் தடைசெய்தது. தமிழ் மக்களின் பாதுகாப்புக்காகவும் அவர்களின் சுதந்திர விடியலுக்காகவும் ஏற்றுக்கொண்ட பொறுப்பை செவ்வனே நிறைவேற்ற, தங்கள் உயிரையும் துச்சமாகத் துறந்து போராடியது. மாற்று இயக்கங்கள் எந்த மக்களின் விடிவுக்காக ஆயுதங்களைத் தூக்கினவோ, அவை இறுதியில் அந்த மக்களையே தங்கள் சுடுகலன்களால் சுட்டுப் பொசுக்கியது வரலாறு. கால ஓட்டம், தமிழீழ விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களைத் தடைசெய்தது தீர்க தரிசனமான முடிவு என்பதைப் பதிவுசெய்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாட்டுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப் பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனாகட்டும் அல்லது அதன் இன்றைய உறுப்பினர்கள் சிலராகட்டும், கூட்டமைப்பின் உருவாக்கத்தும் புலிகளுக்கும் சம்மந்தமில்லை என்பதைப் போல கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். ஆனால் புலிகளாலேயே கூட்டமைப்பு உருவாக்கப் பட்டது என்பது தாயகத்தில் இருக்கும் ஒவ்வொரு தமிழனுக்கும் தெரியும். ஆயிரம் கரங்கள் கொண்டு மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை என்பதைப்போல இந்த உண்மையை எவர் மறைத்தாலும் அது மறையப் போவதில்லை.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிகளான தமிழீழ விடுதலைப் புலிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. கூட்டமைப்புக்கு மாற்றாக மாற்றுத் தலைமைகளை புலிகள் உருவாக்கவும் இல்லை அதனை விரும்பியிருக்கவும் இல்லை.

புலிகள் இல்லாத காலச் சக்கரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று என்று கூவிப் பல அணிகள் களம் புகுந்துள்ளன. எத்தனை அணிகளும் வரலாம் போட்டியிடலாம். ஜனநாயக களத்தில் இது சாத்தியம். தற்போதைய சூழலில் தெற்கில் பெரும் பூதமாகக் கிளம்பியிருக்கும் ராஜபக்சக்களின் சிங்கள பௌத்த இராணுவ மயமாக்கத்துக்கு எதிராக எல்லாமே பொசுங்கிப் போகும் சூழலில் தமிழர் தரப்பு மலையிலிருந்து விழும் கண்ணாடித் துண்டு உடைந்து சிதற்றுண்டு போவதைப்போல சிதைந்து போயிருக்கின்றது.

மாற்றுத் தலைமைகளின் களமிறக்கத்தால் தமிழர் தரப்பின் வாக்குகள் பிளவுபடுவதால் பாதிப்பு ஏற்படுமா? மாற்று அணிகளுக்கு வாக்களித்தால் என்ன? வெகு இயல்பாக இந்தக் கேள்விகள் எழும்.

### வாக்குகள் பிளவுபடுவதால் ஏற்படும் பாதிப்பு

தமிழர் தரப்பின் வாக்குகள் பிளவுபடுவதால் பாதிப்பு ஏற்படத்தான் போகின்றது. சிங்களத் தேசியக் கட்சிகளின் 'ஏஜெண்டுகள்' தாங்களும் தமிழர்களின் வாக்கால் வென்றோம் என்பதைச் சொல்லிக் காட்டப் போகின்றன.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் இடம் பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று என்று பறைசாற்றிக்கொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி களமாடியது. தமிழர் தரப்பின் வாக்குப் பிரிப்புக்கள் சிங்களக் கட்சிகளுக்கு வாய்ப்பாகும் என்று திரும்பத் திரும்ப அரசியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. தமிழ் மக்களில் மிகச் சொற்பமானோர் இழைத்த தவறால் சிங்களக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓர் ஆசனம் தாரை வார்க்கப்பட்டது.

### கடந்த தேர்தலில் என்ன நடந்தது?

இலங்கையின் பொதுத்தேர்தல் நடைமுறையில் 5 சதவீதங்களுக்குக் குறைந்த வாக்குகளைப் பெறும் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வாக்குகள் ஆசனங்களுக்கான வாக்குகளின் போது கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் 5 சதவீதத்துக்குக் குறைவாகப் பெறும் வாக்குளின் மொத்த எண்ணிக்கையை செல்லுபடியாகும் மொத்த வாக்குகளிலிருந்து கழித்து விட்டு எஞ்சிய வாக்குகளே மாவட்ட ஆசனங்களால் (போனஸ் ஆசனம் நீங்கலாக) பிரிக்கப்பட்டு ஓர் ஆசனத்துக்குரிய வாக்குகள் கணிக்கப்படும்.

**ஒவ்வொரு புள்ளடிகளும் பெறுமதியானதே. அந்தப் பெறுமதியை உணர்ந்து, அதனை அர்த்தமுள்ளதாகப் போடுவோம்.**


உறுப்பினரரகத் தெரிவாகி

வெறும் ஏழே வாக்குகளால் நழுவியது 6ஆவது ஆசனம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் வந்த வினை

யாழ்ப்பாணம், ஓக. 18

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்

பெற்ற கட்சி கள் மற்றும் சுயேச்சைகள் உள்ள டங்கலாகப் பெற்ற 10,102 வாக்கு

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 3 லட்சத்து 309 வாக்குகளிலிருந்து 5 சதவீதத்துக்கு குறையப்பெற்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் உள்ளடங்கலாகப் பெற்ற 10 ஆயிரத்து 102 வாக்குகளைக் கழித்தால் ஏற்கப்பட்ட மொத்த வாக்குகள் 2 லட்சத்து 90 ஆயிரத்து 207. இந்த நிலையில் ஓர் ஆசனத்துக்கு 48 ஆயிரத்து 367 வாக்குகள் தேவைப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் 5 சதவீதத்துக்கு குறைந்த வாக்குகளை அந்தத் தேர்தலில் பெற்றிருந்தால் அதனது 15 ஆயிரத்து 15 வாக்குகள் (முன்னணி அந்தத் தேர்தலில் பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளிலிருந்து 7 வாக்குகள் குறையப்பெற்றிருந்தால்) கழிக்கப்பட்டு 2 லட்சத்து 75 ஆயிரத்து 195 வாக்குகள் மட்டும் ஆசனங்களுக்கான வாக்குகளாகக் கணிக்கப்பட்டிருக்கும். இந்த நிலையில் ஓர் ஆசனத்துக்கு தேவையான வாக்குகள் 45 ஆயிரத்து 865. இதன் அடிப்படையில் கூட்டமைப்பு பெற்ற 2 லட்சத்து 7 ஆயிரத்து 557 வாக்குகளுக்கு 4 முழுமையான ஆசனங்களும், மீதியாக 24 ஆயிரத்து 97 வாக்குகள் இருந்திருக்கக் கூடும். கூட்டமைப்பின் இந்த வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற 20 ஆயிரத்து 25 வாக்குகளை விட அதிகம் என்பதால் 5 ஆவது ஆசனமும் கூட்டமைப்புக்கு கிடைத்திருக்கும். போனஸ் ஆசனமும் கிடைக்க, கூட்டமைப்பு மொத்தமாக 6 ஆசனங்களையும் ஈ.பி.டி.பி. ஓர் ஆசனத்தையும் பெற்றிருக்கும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்தத் தேர்தலில் மேலதிகமாகப் பெற்றுக் கொண்ட 7 வாக்குகளைப் பெற்று (5 சதவீத வாக்குகளைப் பெற்றமையால்) கூட்டமைப்பின் 6ஆவது ஆசனம் பறிபோனது. எஞ்சிய ஆசனம் சிங்களக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வசமானது.

வாக்குகள் பிரிக்கப்படுவதன் விளைவை வெறும் 7 வாக்குகளால் 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் நேரடியாக உணர்ந்துகொண்டது. ஒவ்வொரு வாக்கும் சிதறுண்டு செல்லச்செல்ல தமிழரின் பலம் தேய்ந்து தேய்ந்துதான் செல்லும்.

### மாற்று அணிகளுக்கு வாக்களிப்பது..?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பதிலாக மாற்று அணிகள் என்று தங்களைத் தாங்களே கூறிக் கொள்பவர்களுக்கு வாக்களிக்கலாம்தானே. இந்தக் கேள்வியில் நியாயம் இருப்பது போன்று தோன்றலாம். ஆனால் மாற்று அணிகள் எல்லாம் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே குதிரையோட்டிக் கொண்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கு என்ற தமிழர் தாயகம் முழுவதும் அவர்கள் பலமான அணிகளாக இல்லை. சாட்டுக்கு எல்லா மாவட்டங்களிலும் களமிறங்கியிருந்தாலும், அவர்களால் அந்த மாவட்டங்களில் இரட்டை இலக்க வாக்குகளைப் பெற்றுக்கொள்வதே இமாலயச் சாதனைதான்.

அப்படிப்பலமான கூட்டில்லாத அவர்கள் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் வாக்குகளைச் சுருட்டுவதால் எதுவும் கிடைக்கப் போவதில்லை. மறுபுறம் பலமான அணியாக தாயக தேசம் எங்கும் வியாபித்திருக்கும் கூட்டமைப்புக்கு மேலும் வலுச் சேர்ப்பதே, சிங்கள பௌத்த இராணுவ மயமாக்கல் என்ற பூதத்தை எதிர்ப்பதற்கான சிறுதுரும்பாக அமையும்.

ஒவ்வொரு புள்ளடிகளும் பெறுமதியானதே. அந்தப் பெறுமதியை உணர்ந்து, அதனை அர்த்தமுள்ளதாகப் போடுவோம்.

மாற்று அணிகள் என்ற வெற்றுக் கோசங்கள் ஊடாக வாக்குப் பிரிப்புக்களைத் தூண்டி சிங்களக் கட்சிகள் காலூன்றுவதை எதிர்ப்போம்.

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.

- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 5

பகுதி– I


ஆக்கம்: த.தயானந்தன்
அதிபர்
நகுலேஸ்வர ம.மகா வித்தியாலயம்

நேரம்: 45 நிமிடம் பெயர்: ................................ . பாடசாலை: ..............................................

மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக

➢ 1ஆம் 2ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய உருவைத் தெரிவு செய்க.

01) நீர்
நோய்
பூச்சி


(1)

(2)

(3)


02) மென்மை
அழகு
மணம்


(1)

(2)

(3)

➢ விரித்து வைக்கப்பட்ட சதுரமுகியின் வெட்டுத் துண்டத்தை அவதானித்து விடை அளிக்குக.





03) இச்சதுரமுகியில் எழுத்து 'எ' இற்கு எதிரே இருக்கும் எழுத்து யாது?

(1) ஒ (2) இ (3) அ

04) இச்சதுரமுகியில் எழுத்து 'ஐ'இற்கு எதிரே இருக்கும் எழுத்து யாது?

(1) எ (2) உ (3) அ

05)




இவ்வுருவை ஆக்க 14 தீக்குச்சிகள் தேவை எனின் மேலும் 24தீக்குச்சிகள் கள் கொண்டு எத்தனை முக்கோ ணிகள் அமைக்கலாம்?

(1) 5 (2) 6 (3) 8


➢ வெற்றிடத்துக்குப் பொருத்தமான இலக்கத்தைத் தெரிவு செய்க.

06)




(1) 15 (2) 10 (3) 4

07)




(1) 5 (2) 11 (3) 7

➢ 8ஆம்,9ஆம் வினாக்களிலுள்ள வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

08) எலி : வளை எனின் ............: கூடு

(1) பாம்பு (2) முயல் (3) காகம்

09) விமானம் : வலவன் எனின் கப்பல் : ...........

(1) பாகன் (2) மீகாமன் (3) சாரதி


10) 3,4என்னும் இரு எண்களாலும் மிகுதியின்றி வகுபடக் கூடியனவும் 10 இற்கும் 65இற்கும் இடையே உள்ளனவுமான எண்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 5 (2) 3 (3) 4

11) நான் ஓர் ஆண்ஆவேன். சதாசிவத்தின் மகன் எனது சித்தப்பா எனின் சதாசிவத்துக்கும் எனக்கும் உள்ள உறவுமுறை யாது?

(1) சதாசிவம் எனது பாட்டன்
(2) சதாசிவம் எனது மாமா
(3) சதாசிவம் எனது பெரியப்பா

12) மூன்று சமச்சீர்க் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவு செய்க



(1) (2) (3)

13) மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி முக்காலிகள் ஐந்து உள்ளன. எனின் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 18 (3) 23

14.சிறுவர்களுக்கான விளையாட்டுக் கார் ஒன்றை வாங்குவதற்கு ரூபாய் 9500 தேவைப்படுகிறது. குமாரிடம் ரூபாய் 4700 இருக்கிறது. மிகுதியை தனது ஒரு நண்பர்களிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொண்டான் பெற்றுக் கொண்ட பணம்.

(1) ரூபா 2400 உம் ரூபா 1300 உம்
(2) ரூபா 2250 உம் ரூபா 2555 உம்
(3) ரூபா 2200 உம் ரூபா 2600 உம்

15) எமது நாட்டில் மாலை நேரங்களில் வடமேல்,தென் மாகாணங்களில் இடையிடையே இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. இவ்வறிவித்தலுக்கு அமைய மழை பெய்யக்கூடிய இரு நகரங்கள் முறையே

(1) குருநாகல்,காலி
(2) அநுராதபுரம்,மாத்தறை
(3) மாத்தறை, புத்தளம்

16)30cm நீளமான மாலை கட்டும் போட்டியில் 5பிள்ளைகள் போட்டியை முடித்த விதம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| பூஜா | - | 6நிமிடம் |
| பூரணி | - | 9நிமிடம் |
| மோகனா | - | கட்டி முடிக்கவில்லை |
| சாந்தி | - | 5நிமிடம் |
| வசந்தி | - | 7நிமிடம் |

முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் முறையே

(1) மோகனா,பூரணி,வசந்தி
(2) சாந்தி,பூஜா,வசந்தி
(3) பூரணி,வசந்தி,சாந்தி


17) பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.


1) பலம் நழுவிப் பாலில் விழுந்தது.
(2) பழம் நழுவிப் பாலில் விழுந்தது.
(3) பழம் நழுவிப் பாழில் விழுந்தது.

18)'வலகம்பா'சொல்லிலுள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கக்கூடிய ஒரு சொல்

(1) காலம் (2) பகல் (3) பாவம்

19) கீழே தரப்பட்டுள்ள எண்களுக்கு ஏற்ப எண்.....ஐச் சுற்றி வரைய வேண்டிய உரு யாது?



20) 1தொடக்கம் 100 வரையான எண்களை எழுதும்போது இலக்கம் 3எத்தனை தடவை எழுதப்படும்?

(1) 19 (2) 13 (3) 20

21) இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க

1. 1மA23*4 - 1மB23*5
2. Bபக25V7 - Bபக25V7
3. 7BC836E - 67BC846

22) 293, 283, 241, 235என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது கிடைக்கும் முதலாம் எண்ணினதும் மூன்றாம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்கள் முறையே


(1) 4,9 (2) 3,8 (3) 9,4

23) தாரகனின் தற்போதைய வயது 9ஆகும். அவனுடைய தந்தையின் தற்போதைய வயது தாரகனின் வயதின் 4 மடங்கிலும் பார்க்க மூன்றினால் கூடியதாகும். இன்னும் நான்கு ஆண்டுகளில் தந்தையாருடைய வயது யாது?

(1) 40 (2) 37 (3) 43

24) ஆண்டில் சில மாதங்களுக்கு 31 நாள்களும் வேறு சில மாதங்களுக்கு 30நாள்களும் உள்ளன. அவ்வாறெனின் 31 நாள்கள் உள்ள மாதங்களின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 5 (3) 6




25) A,B,C,Dஆகிய ஒவ்வொரு முக்கோணி யிலுமுள்ள மிகப் பெரிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண் யாது?

(1) 2468 (2) 4321 (3) 2286

➤ பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவு செய்க.


26) நிகழ்வு : இரகுவரன் தன் சொந்த நாட்டை விட்டு வெளிநாட்டுக்குச் சென்று உழைக்க நினைத்தான். ஆனால் வெளிநாடு சென்ற அவனுக்கு அங்கும் வேலை கிடைக்கவில்லை.

(1) ஆழம் அறியாமல் காலை விடாதே
(2) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
(3) முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்.


27) நிகழ்வு : செந்தூரன் "தானும் உண்ணான் பிறருக்கும் கொடான்" இவனது நடத்தைக்குப் பொருத்தமானது

(1) போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து
(2) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
(3) வைக்கோற் பட்டடை நாய்

➤ பின்வரும் உருக்களில் நிழற்றப்பட்ட துண்டுகளின் தொகையினைக் காட்டும் பின்னத்தின் கீழ்க் கோடிடுக.

28) 

(1) $\frac{1}{8}$
(2) $\frac{1}{5}$
(3) $\frac{7}{8}$

29) 

(1) $\frac{5}{16}$
(2) $\frac{4}{8}$
(3) $\frac{1}{4}$

➤ கீழே தரப்பட்டுள்ள முதற் கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்குப் பதிலாக சரியான எண்களைக்கொண்ட கூட்டைத் தெரிவு செய்க

30) 13 + [30+6] = 49

(1) [20+6] (2) [25+9] (3) [25+11]

31) [20X10] + 75 = 275

(1) [50X4] (2) [10X10] (3) [20X5]

32) பின்வரும் வாக்கியத்தில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக்கொண்ட கூற்றைத் தெரிவு செய்க.

**அரசனின் காருண்ணியத்தை** எல்லா மக்களும் பாராட்டினர்.


(1) அரசன் , கற்பித்தல் (2) கோன், இரக்க சிந்தனை (3) அரசன்,உத்தரவு


33) ஓர் எண்ணின் இரு மடங்குடன் 10ஐக் கூட்டி இரண்டால் வகுத்து 5ஐக் கழித்தால் 3 மிகுதி ஆகும் அந்த எண் யாது?


(1) 8 (2) 3 (3) 16

**பின்வரும் உருக்களில் ஒவ்வொன்றும் குறித்தவொரு ஒழுங்கிற்கமைய ஆக்கப்பட்டுள்ளன. அவற்றின் போக்கினை அவதானித்து நான்காவது உரு எவ்வாறு அமைய வேண்டும் எனக் கீழ்வரும் விடைகளில் இருந்து தெரிவு செய்க.**

34) 

(1) (2) (3)


35) 


(1) (2) (3)



36) பின்வரும் தகவல்களை ஒழுங்கமைக்க

(1) ஒருநாள் தன் தந்தையின் தானியக் களஞ்சியத்திற்கே நெருப்பு வைத்துவிட்டான்.
(2) அவர்கள் நெருப்பை அணைத்து விட்டார்கள்.
(3) எடிசன் ஏதாவது புதுப்புது விளையாட்டுக்களில் ஈடுபடுவான்
(4) நல்லவேளை அது நெருப்பாகி விடுவதற்கு முன்னர் யாரோ பெரியவர்கள் கண்டுவிட்டார்கள்.
5. அப்படிச் செய்யாவிடில் ஊரே எரிந்து சாம்பலாகிப் போயிருக்கும்.


(1) 5,4,2,3,1 (2) 3,1,4,2,5 (3) 5,4,3,2,1


37) பின்வரும் உருவில் விடுபட்ட பகுதியை நிரப்பப் பொருத்தமான பகுதிகளைக் கீழேயுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்க.



(1) (2) (3)


**இவ்வுருக்களில் இரண்டு ஏதோவொரு வகையில் ஒரே மாதிரியானவை ஒன்று வித்தியாசமானது. வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.**

38) (1) (2) (3)


39) (1) (2) (3)


40. அருகருகே உள்ள இரு கதிரைகளில் இருவர் அமர்ந்துள்ளனர். அதில் ஒருவர் மற்றவரின் மாமா. மற்றவர் அவரின் மருமகளல்லள். அவ்வாறெனின் மற்றவருக்கும் அவருக்குமுள்ள உறவுமுறை

(1) மருமகன் (2) மாமா (3) பேர்த்தி

(40X21/2= புள்ளிகள்)

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# நிர்வாகத்துறை தொடர்பாக கோத்தாவுக்கு விளக்கமில்லை

## ஹேமகுமார நாணயக்கார தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 6**

**அரசியல் அனுபவம் அற்ற ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எவ்வாறு நிர்வாகத்துறை செயற்பாடுகள் தொடர்பில் விளக்கம் பெற்றிருப்பார்? என்று தாய் நாட்டுக்கான மக்கள் கட்சியின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார கேள்வி எழுப்பினார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: செயற்படும் வீரர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சி பயங்கரவாதிகளை பாதுகாப்பதையும், குடும்ப ஆட்சியை பலப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கோத்தாபய, மஹிந்த, பசில் என்று தனித்தனியாக மக்கள் பிரித்து பார்த்தாலும், அவர்கள் ஒரே மரத்தில் காய்த்த காய்களே என்பதை மக்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அரசியல் அறிவு இல்லை. அவருக்கு இராணுவ வீரர் என்ற வகையில் போர் தொடர்பிலும் , போர் ஆயுதங்கள் தொடர்பிலும் விளக்கம் இருக்கலாம். ஆனால் நிர்வாகத்துறை தொடர்பான விளக்கம் அவரிடம் இருக்கவாய்ப்பில்லை. இந்தநிலையில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு அவர் மீண்டும் தொழில் வாய்ப்புகளை வழங்கி வருகின்றார். நிர்வாகப் பிரிவுகளில் இராணுவத்தினரை நியமிப்பதால் எந்தவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

தேசத்தின் மீது பற்றுள்ளவர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் ராஜபக்சக்கள், பயங்கரவாதிகளை அரவணைத்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் இராணுவ வீரர்களைக் கொன்றதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சில அரசியல்வாதிகளைக் கொலைச் செய்யுமாறு தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தனக்கு உத்தரவிட்டிருந்த போதும், அவர்களை கொலைச்செய்யாமை தொடர்பில் வருந்துவ தாகவும் தனது தேர்தல் பரப்புரைகளில் தெரிவித்துள்ளார். இவ்வாறான பழிவாங்கும் எண்ணத்திலான கருத்துக்களை தெரிவிப்பது எம் நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளதால் அவர் இவ்வாறு தெரிவித்திருப்பது சட்டவிரோதமான செயற்பாடாகும். இதனால் அவரைக் கைது செய்து சட்டநடவடிக்கைகள் எடுக்க முடியும்.

கருணாவை மாத்திரமல்ல விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கே.பியையும் இவர்கள்தான் பாதுகாத்து வருகின்றார்கள். இராணுவத்தினருக்கு ஆதரவாளர்கள் என்று கூறிக்கொள்ளும் ராஜபக்சக்கள் இராணுவ வீரர்களை கொலைச் செய்ததாக குறிப்பிட்டு பெருமைப்பட்டுக் கொள்ளும் கருணாவை ஆதரித்து வருவது முறையற்ற செயற்பாடாகும்.

கிழக்கு வாழ் தமிழ் , முஸ்லிம் மக்களின் வாக்குகளைத் தங்களால் வெற்றிக்கொள்ள முடியாததால் கருணாவைத் தனித்துப் போட்டியிடுமாறு கூறிவிட்டு, வடக்கு, கிழக்கு பகுதியில் இனவாதக் கருத்துகளை விதைத்து மீண்டும் ஒரு இனக்கலவரத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள்- என்றார். (எ)

# மக்களின் தோழனாக என்றும் இருப்போம்!

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



மலையகம், ஜூலை 6

மக்களின் தோழனாக இருந்து மலையக மக்களுக்கான சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அட்டன் எபோட்சிலி தோட்டத்தில் இடம்பெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நம்மவர்கள் யானைச் சின்னத்துக்கே வாக்களித்தார்கள். இம்முறை யானைச் சின்னம் இல்லை. அது காட்டுக்குபோய்விட்டது. எனவே, தொலைபேசிக்கு வாக்களிக்கவும். சஜித் பிரேமதாச பிரதமரானால்தான் நாங்கள் அமைச்சராக முடியும். எனவே, முதலில் தொலைபேசிக்கு வாக்களித்துவிட்டு மூன்று விருப்பு வாக்குகளையும் தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களுக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். திகாம்பரம், உதயகுமார், ராதாகிருஷ்ணன் ஆகிய மூவரும் மலையக மக்களுக்கு கூடுதல் சேவைகளை செய்துள்ளோம். கண்டியில் இருந்து வாக்குக் கேட்டு வந்துள்ளனர். மேலும் சிலரும் வருகின்றனர். இவர்களுக்கு வாக்களிப்பதால் எதுவும் நடக்கப்போவதில்லை. தமிழ் முற்போக்கு கூட்டணிதான் இலங்கையிலுள்ள இரண்டாவது பெரிய தமிழ்க்கட்சியாகும். 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்வசம் இருந்தனர். மூன்று அமைச்சுகள்கூட வழங்கப்பட்டிருந்தன. அவற்றின்மூலம் நாம் சேவைசெய்து காட்டினோம் என்றார். (ம)

# சரவணபவனின் பங்களிப்பால் காரைநகரில் பெரும் அபிவிருத்தி

## பிரதேச சபை உறுப்பினர் விஜயராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் அயராத முயற்சியினால் காரைநகர் பிரதேசம் கடந்த நான்கு ஆண்டுகள் காலப்பகுதியில்உட்கட்டுமானரீதியாக பெரு வளர்ச்சி, அபிவிருத்தியை அடைந்துள்ளது என்று காரை நகர் பிரதேச சபையின் சிரேஸ்ட உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் உறுப்பினருமான ஆண்டி ஐயா விஜயராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் அந்த அளவிற்கு தன்னை அர்ப்பணித்து இப்பிரதேச வளர்ச்சிக்கு உதவியதுடன் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் பல்வேறு பட்ட நிதியீட்டங்களுக்கூடாக பல மில்லியன் நிதியில் அபிவிருத்திகளை முன்னெடுத்த செயல்வீரன். காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட காரைநகர் தென்மேற்கு கிராமத்தின் 15 உட்கட்டுமான திட்டத்திற்கு 57 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பெரும் அபிவிருத்திகள் இடம்பெற்றன. இதில் 20 லட்சம் ரூபா செலவில் கேசடை வீதி மீள்சீரமைப்புச்செய்யப் பட்டமை, அத்துடன் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாலயம் சீரமைப்புச் செய்யப்பட்டமை உள்ளடங்களான திட்டங்களாகும். இதேபோல காரைநகர் தெற்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பிரதேச அபிவிருத்திக்கு 16 உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்திகள் முன்னெடுக்க ப்பட்டுள்ளன. இதில் 20லட்சம்ரூபாசெலவில்காரை நகர் அண்டர்சன் வீதியும், 15 லட்சம் ரூபா செலவில் தோப்புக்காடு ஐன்ஸ்ரின் சனசமுகநிலையமும் மீள்சீர மைப்புச்செய்யப்பட்டன. இவ்வாறு காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட 9 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களுக்கு கடந்த நான்கு வருட காலப்பகுதியில் 790 லட்சம் ரூபா செலவு செய்து அபிவிருத்தி செய்துள்ளார். இவருக்கு காரைநகர் பிரதேச மக்களின் சார்பில்உயர்ந்த மதிப்பளித்து நன்றி கூறுகின்றோம்- என்றார். (ப-50)

# கணவன், மனைவியின் மீது இனந்தெரியாதோர் தாக்கு

கொழும்பு, ஜூலை 6

புத்தளத்தில் இனந்தெரியாதோரால் தாக்குதலுக்குள்ளான கணவன், மனைவி ஆகியோர் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். புத்தளம் தம்பபண்ணி பீ முகாமைச் சேர்ந்த கணவன், மனைவி மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அவர்களது வீட்டின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (3) இரவு இடம்பெற்றதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் இடம்பெற்ற இரவு தாக்குதலுக்கு உள்ளான நபரின் வீட்டிற்கு சென்ற நான்கு பேர் கொண்ட குழுவொன்று தகாத வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்ததுடன், குறித்த நபரை வீட்டிற்கு வெளியே வரவழைத்து அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பின்னர், குறித்த நபருடைய வீட்டின் யன்னல்மீது கல்வீச்சுத்தாக்குதல்நடத்திய சந்தேக நபர்கள், வெளியே வந்த குறித்த நபரின் கர்ப்பிணித் தாயான மனைவி மீதும் தாக்குதல் நடத்தியதாக மேற்கொள்ளப்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)

# எனது மகனை தலைவராக்க மாட்டேன்

## பழனி திகாம்பரம் தெரிவிப்பு

நுவரெலியா, ஜூலை 6

தொழிலாளர் தேசிய சங்கத்துக்கு தொழிலாளி ஒருவரின் பிள்ளையே தலைவராக வேண்டும். ஒருபோதும் எனது மகனைக் கொண்டுவந்து கட்சியில் பதவிகளை வழங்கமாட்டேன் என்று சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வீடு வேண்டும் என்ற எல்லோருடைய கோரிக்கையையும் ஒரே நாளில் நிறைவேற்றி விட முடியாது. எல்லோருக்கும் வீடுகளைக் கட்டிக்கொடுத்துவிட்டோம் எனவும் நான் கூறவில்லை. எமக்கு கிடைத்த நான்கரை வருடங்களில் பல வீட்டுத்திட்டங்கள் முன்னெடுத்தோம்.எனக்குப் பின்னால் எனது மகன் அரசியலுக்கு வரப்போவதில்லை. ஏனெனில் அவருக்கு உங்களைப் பற்றித் தெரியாது. சொகுசாக வாழ்ந்தவர். ஆனால் நான் அப்படியானவன் அல்லன். உங்களது கஷ்டங்கள் அறிந்தவன். அவற்றை நானும் அனுபவித்துள்ளேன். எனவே, என்னுடைய மகனைக் கொண்டுவந்து தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவராக்கமாட்டேன். இந்தச் சங்கத்துக்கு தலைவராகக்கூடிய தகைமை, உரிமை உங்களின் பிள்ளைகளுக்கே இருக்கின்றது. தேர்தலுக்காக இதனை நான் பேசவில்லை. உண்மையாகவே சொல்கின்றேன். மலையக இளைஞர்களே, நுவரெலியா மாவட்டத்தில் எமது இருப்புக்கு ஆபத்து வரப்போகின்றது. ஒரு கட்சியில் எட்டு தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். வாக்குகளைச் சிதறடிக்க மேலும் பலர் போட்டியிடுகின்றனர். எமக்கான பிரதிநிதித்துவம் இருந்தால் மட்டுமே பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேச முடியும் - என்றார். (ப)




வெற்றியகாடு பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. ஆலய வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 26 ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரப்பமாகியது. (ஐ-108)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

கொடிகாமம், ஜூலை 6

மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை குறுக்கே வந்த கட்டக்காலி மாடுகளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் சாவகச்சேரி பிர தேச சபை உறுப்பினர் ஒருவர் காயமடைந்தார். இந்தவிபத்து ஏ -9 வீதி நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ஐ-159)

# சதிகளைத் தோற்கடிப்பதற்கு சஜித் அணியை ஆதரியுங்கள்

## முன்னாள் அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

**மன்னார், ஜூலை 6**

**இந்த நாட்டிலே சதித்திட்டங்கள் தோக்கடிக்கப்பட வேண்டுமாக இருந்தால், நிலையான நல்லாட்சி ஏற்பட வேண்டும் என்றால், சிறுபான்மைச் சமூகம் தன் மானத்தோடு வாழ வேண்டுமாக இருந்தால் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியை ஆதரியுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட வேட்பாளர் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் நாம் மிக நிதானமான போக்கோடு களம் இறங்கி இருக்கின்றோம். இந்தத் தேர்தலிலே இந்த நாட்டிலே தமிழர்களும் முஸ்லிம்களும், சிங்களவர்களும், ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற உணர்வோடு நாங்கள் முயற்சிக்கிறோம். கடந்த காலங்களிலே இந்த நாட்டிலே மூன்று தசாப்தங்களாகப் போர் இடம்பெற்றது.

சிங்கள,தமிழ் , முஸ்லிம் மக்கள் உயிர்களைப் பலி கொடுத்தார்கள். பல அழிவுகளைச் சந்தித்தார்கள். பல இழப்புகளை நாங்கள் சந்தித்தோம். அகதிகளாக்கப்பட்டோம். அலைந்து திரிந்தோம். பல்வேறு துன்பங்களை எல்லாம் அனுபவித்தோம்.

எமது எதிர்காலம் சிறப்பாக அமையும். எமது பிள்ளைகளுடைய எதிர்காலம் சிறப்பாக அமையும். எமது பிள்ளைகள் நிம்மதியாக இந்த நாட்டிலே வாழ்வார்கள் என்ற ஒரு பெரிய எதிர்பார்ப்பு எம்மிடத்தில் இருந்தது.

ஒரு சில பேரினவாதச் சக்திகள் இந்த நாட்டிலே மிக மோசமான செயற்பாடுகளை ஆரம்பித்தார்கள். தமிழ்ச் சமுதாயத்தின்மீது அன்று சொல்லம்புகளை எய்தவர்களும் அவர்களை மோசமாகக் காட்டியவர்களும் பின்னர் முஸ்லிம்கள் மீது தங்களுடைய பார்வையைச் செலுத்தத் தொடங்கினார்கள். திட்டமிட்டுச் சதி செய்தார்கள். பல பிரச்சினைகளை உண்டாக்கினார்கள். தம்புள்ளையில் தொடங்கி திகன வரைக்கும் பிரச்சினைகள் நடந்தன. எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு சில சாரார் காரணமாக இருந்தார்கள். அவர்கள் எப்படியாவது இந்த நாட்டிலே அமைதியாக வாழுகின்ற சிறுபான்மை இனத்தை வலிய சண்டைக்கு இழுத்து, அவர்களுடைய நிம்மதியைக் குலைத்து அவர்களின் எதிர்காலத்தைச் சீரழித்து அவர்களுடைய பொருளாதாரத்தை அழித்து அவர்களை நிம்மதியாக வாழுகின்ற நிலையில் இருந்து மாற்ற பல சதிகளைச் செய்தார்கள். இவ்வாறான சதிகள் நடந்த ஒவ்வொரு கட்டத்திலும் நாடாளுமன்றத்தில் பேச வேண்டிய அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நாங்கள் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறோம்- என்றார். (ப)

## கிளி. இந்துக் கல்லூரியில் கைகள் கழுவும் கருவிகள்

கொடிகாமம், ஜூலை 6

பாடசாலைகள் அனைத்தும் நாளை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும் நோக்கோடு கைகழுவும் கருவிகள் பொருத்தப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை இந்துக் கல்லூரியின் ஆசிரியர்கள் அவற்றைப் பொருத்தினர். கொரோனாவின் கோரத்திலிருந்து விடுபட்டு மூன்று மாதங்களுக்குப் பின்னர் இன்று திங்கட்கிழமை கல்வி அமைச்சின் அறிவுரைகளுக்கு அமைவாக மீளவும் கற்றல் நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த நிலையில் மாணவர்களின் நலன் கருதி சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றும் நோக்குடன் கொரோனாவிலிருந்து விடுபட்ட பாதுகாப்பான மாணவர் சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஆசிரியர்களால் கை கழுவுவதற்கான கருவிகள் பொருத்தப்பட்டன. (ப-159)



## 2 ஆயிரம் மில்லியன் ரூபா மின்சார சபைக்கு நட்டம்!

கொழும்பு, ஜூலை 6

இந்த வருடத்தில் தமக்கு 2 ஆயிரம் மில்லியன் ரூபா நட்டம் ஏற்படலாம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக அதிகரித்துள்ள மின் கட்டணங்களுக்காக வழங்கப்பட்டுள்ள சலுகை தொடர்பில் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என சபையின் தலைவர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

சலுகை வழங்குவது தொடர்பில் பரிந்துரை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட குழுவிடம் வினவியபோது, தமது இறுதி அறிக்கையை இன்று அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டுள்ள அனைத்து பாவனையாளர்களுக்கும் அதிகபட்ச சலுகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் நால்வர் கொண்ட அந்தக் குழு மேலும் தெரிவித்துள்ளது. (எ)



கொடிகாமம் கொயிலாமனை அண்ணமார் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ-159)

## வாகனத் தரிப்பிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

கோண்டாவில் பிரதேச வைத்தியசாலைக்கான நோயாளர் வாகனத்தரிப்பிடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் (காணி) சு.முரளிதரனால் நேற்றுமுன்தினம் வாகனத்தரிப்பிடம் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் செயற்றிட்டத்தில் அமரர்கள் நடராஜா செல்வராணி நினைவாக அவரது புதல்வன் கனடா வாழ் நடராஜா உமாகாந்தின் பங்களிப்பில் குறித்த வாகனத்தரிப்பிடம் அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-222)

# வாழ்வாதார உதவிகளும் அன்பளிப்புகளும்





யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால், நெடுந்தீவு பிரதேசத்தில் 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள், சுகாதார தொற்று நீக்கித் திரவம், சவர்க்காரம், முகக்கவசம், வீட்டுத் தோட்ட விதைகள், சுகாதார விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள் என்பன வழங்கப்பட்டன. (க)



லண்டனைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை மன்மதராஜாவின் நிதியுதவியில் வவுனியா திருநாவற்குளம் பகுதியில் வசிக்கும் சுரேஸ் உலகேந்திரன் பாலாம்பிகையின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் தையல் இயந்திரம் வெளிச்சம் அறக்கட்டளையின் ஊடாக வழங்கப்பட்டது. (க-222)



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும் தற்போது இங்கிலாந்தில் வசிக்கும் வாமதேவன் சுபாஸ்கரனால் திருமண நாள், பிறந்தநாள் நினைவாக, தெரிவு செய்யப்பட்ட 21 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (க-63)



கிளிநொச்சி செல்வாநகரில் தந்தையை இழந்து தாயாருடன் வாழும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் ஒன்றின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தங்கராசா தயாளன் 32 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகளை வழங்கியுள்ளார். (க-159)



இத்தாலி பலர்மோ சிறகுகள் அமைப்பினால் வழங்கிய நிதிப் பங்களிப்பில், ஊர்காவற்றுறை நாரந்தனைக் கிராமத்தில் வசிக்கும் முன்னாள் போராளியான கந்தசாமி ஸ்ரனிஸின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் சைக்கிள் பழுது பார்க்கும் கடைக்கான உதிரிப்பாகங்கள், யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (க-159)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம் ஊடாக ஆஸ்திரேலியா வாழ் நிலைய உறுப்பினர் சுப்பிரமணியம் சுபதாசன் மாதாந்தம் வழங்கும் நிதியுதவியில், யாழ்ப்பாணம் சிவன் கோவில் பகுதியில் கச்சான் வியாபாரம் செய்யும் மூதாட்டிக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது. (க-222)





வவுனியாவில் கடந்த வருடம் கொள்கலன் சுத்திகரிப்பின் போது, உயிரிழந்த வவுனியா அண்ணாநகரைச் சேர்ந்த சந்தனசாமியின் வீட்டைப் புனரமைப்பதற்கு, கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகரும், நயினாதீவைச் சேர்ந்த சமூகத் தொண்டனுமான காலஞ்சென்ற செல்லையா சந்திரசேகரத்தின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது பிள்ளைகளால் நிதியுதவி வழங்கப்பட்டது. (க-110)





ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக, கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி திருத்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-222)





சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு வழங்கப்பட்ட நிதியிலிருந்து வவுனியா உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட வீரர்கள், மத்தியஸ்தர்கள் போன்றவர்களுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-110)

# சஜித் அணி வேட்பாளர் விபத்தில் நேற்றுச் சாவு

கொழும்பு, ஜூலை 6
வாகன விபத்தில் சிக்கி முன்னாள் இராஜாங்க அமைச்சர் அசோக வடிகமங்காவ உயிரிழந்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட வேட்பாளராக இம்முறை தேர்தலில் போட்டியிடவிருந்தார். வாரியப்பொலவில் இந்த விபத்து நேற்று மதியம் இடம்பெற்றது. (ஒ,5)

# கஷோகி கொலை விசாரணை அதிர்ச்சித் தகவல்கள் கசிவு!

நியூயோர்க், ஜூலை 6
சவூதி ஊடகவியாளர் ஜமால் கஷோகி கொலை தொடர்பான விசாரணையில் இஸ்தான்புல்லில் உள்ள சவூதி துணைத் தூதரக அதிகாரியொருவர் அதிர்ச்சி வாக்குமூலமொன்றை அளித்துள்ளார்.
துருக்கியில் காக்லேயன் மாவட்டத்தில் உள்ள இஸ்தான்புல் மாகாணத்தின் பிரதான நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஜமால் கஷோகி கொலை தொடர்பான விசாரணை ஆரம்பமானது. தூதரகத்துக்காகப் பணிபுரிந்த உள்ளூர் தொழில்நுட்ப வல்லுநரான ஜெக்கி டெமிர், விசாரணையின் முதல் நாளில் வாக்குமூலம் வழங்கினார்.
அவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது
காஷோகி அருகிலுள்ள துணைத் தூதரகத்திற்குள் நுழைந்த பின்னர் நான் தூதரின் இல்லத்திற்கு அழைக்கப்பட்டேன். அங்கே ஐந்து முதல் ஆறு பேர் இருந்தார்கள். அவர்கள் தந்தூர் அடுப்பை ஒரு மணி நேரத்திற்குள் எரிய வைக்குமாறு கேட்டுக்கொண்டனர். தூதரின் தோட்டத்தில் அடுப்புக்கு கூடுதலாக பல இறைச்சிகள் மற்றும் ஒரு சிறிய பார்பிக்யூவைக் கண்டேன். அடுப்பைச் சுற்றியுள்ள பளிங்கு அடுக்குகள் ஒரு இரசாயனத்தால் சுத்தம் செய்யப்பட்டதைப் போல நிறம் மாறியிருந்தது போலத் தோன்றியது என்றார்.
இன்னொரு சாட்சியாளர், 'உள்ளூர் உணவகமொன்றிலிருந்து பதப்படுத்தப்படாத கபாப் துண்டுகளை வாங்க அவர்கள் உத்தரவிட்டனர்' என்று தெரிவித்துள்ளார்.
இருண்ட ஜன்னல்களுடன் ஒரு கார் வந்தபோது, வாகனத் தரிப்பிடக் கதவைத் திறக்க முற்பட்டேன். ஆனால், அவர்கள் தன்னை விரைவாக தோட்டத்தை விட்டு வெளியேறும்படி கூறினார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
59 வயதான வொஷிங்டன் போஸ்ட் கட்டுரையாளரான கஷோகி, இஸ்தான்புல்லில் உள்ள சவூதி துணைத் தூதரகத்தில் வைத்து 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி கொல்லப்பட்டார். தனது திருமண ஆவணங்களைப் பெறுவதற்காக வளாகத்துக்குள் நுழைந்திருந்தபோதே அவர் படுகொலை செய்யப்பட்டார்.
இதனிடையே மார்ச் மாதத்தில், கஷோகி கொலை தொடர்பாக துருக்கி வழக்குரைஞர்கள், சவூதி மகுடத்திற்குரிய இளவரசர் முகமது பின் சல்மான், ராஜ்யத்தின் உண்மையான ஆட்சியாளரான இரண்டு முன்னாள் மூத்த உதவியாளர்கள் உட்பட 20 சவூதி நாட்டினரைக் குற்றஞ்சாட்டினர்.
இந்த குற்றச்சாட்டின்படி, சவூதி அரேபியாவின் முன்னாள் துணைப் புலனாய்வுத் தலைவர் அகமது அல்அஸ்ரி ஒரு குழுவை நிறுவி, சவூதி அரசை விமர்சித்த பத்திரிகையாளரின் கொலைக்கு திட்டமிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (எ)

வாகனம் வாடகைக்குண்டு
யாழ். மாநகர சபை எல்லைக்குள்
சாரதியுடன் கூடிய
ஹயஸ் ரக வாகனம்
மாதாந்த வாடகைக்குண்டு.
077 122 7980, 077 230 0837

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம், அரச உத்தியோகம், நற்பண்புடைய, மாத வருமானம் 100 000 மேல் (திருவாதிரை, 8 இல் செவ்வாய் கிரகபாவம் 60) கொண்ட 1976 இல் பிறந்த மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட A/L படித்த அழகிய, பண்பான, போரால் பாதிக்கப்பட்ட, பெற்றோரை இழந்த, வறுமைக்கோட்டுக்குட்பட்ட மணமகளை எதிர்பார்க்கின்றனர். (கூட்டெண் 01 அல்லது 05) உரியவர் மட்டும் தொடர்புகொள்க. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
077 693 5338

சேவை நலன் பாராட்டு
அன்ரனிப்பிள்ளை மதியழகன்
யாழ். பல்கலைக்கழகத்தில் 1989 ஆம் ஆண்டிலிருந்து 2020 வரையான 31 வருடங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தராக எம்மோடு பணியாற்றி 01.05.2020 அன்று ஓய்வுபெற்ற எமது சங்க அங்கத்தவர் அன்ரனிப்பிள்ளை மதியழகன் அவர்களின் சேவையை பாராட்டுவதுடன் அவரின் ஓய்வு காலம் சீரும் சிறப்புமாக அமைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்
யாழ். பல்கலைக்கழகம். (J.12361) (13.17)

# தாக்குதல் முறியடிப்பு

இஸ்லாமபாத், ஜூலை 6
ஈராக்கின் பக்தாத் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது. ஈரான் நாட்டின் புரட்சிப்படை தலைவரான சுலைமானி கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இதனால் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே பதற்றம் அதிகரித்து வருகிறது. சுலைமானி கொல்லப்பட்டதற்கு பழிக்குப்பழி வாங்கும் நடவடிக்கையாக ஈராக்கில் உள்ள அமெரிக்க விமானப்படைத் தளங்கள்மீது அவ்வப்போது ஈரான் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தப் பின்னணியிலேயே மேற்படி தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வடக்கில்..

வடக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான தேவாலயங்கள் மற்றும் வீதிகளில் அமைந்துள்ள சொரூபங்களுக்கு ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டனர்.
இதேவேளை மன்னார் மறைமாவட்ட பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயப் பங்குத்தந்தையும் திருஅவையின் சட்டவல்லுநருமான அருட்பணி எஸ்.கே.தேவராஜ் மர்ம நபர் ஆலயத்துக்கு வந்தமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதியம் 1.30 அளவில் ஒருவர் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்துக்குள் வந்து நடமாடியுள்ளார். ஆலயத்துக்குள் திருச்சொரூபம் இருந்த கண்ணாடி கூட்டை திறந்து அவற்றை ஆய்வு செய்து கொண்டிருந்த பொழுது பெண் ஒருவர் அவரைக் கண்டு விசாரித்துள்ளார். அவரின் நடத்தை பற்றி பங்குத் தந்தையிடம் கூறினார். பின்னர் சந்தேகநபர் தலைமறைவாகிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
அவர் பை ஒன்றை தோளில் தொங்க விட்டிருந்தார் என்றும் கையிலும் ஒரு பை வைத்திருந்தார் என்றும் பாதுகாப்புக் கமராப் பதிவுகள் மூலமாக அவரை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதனையடுத்து வடக்கு மாகாணத்திலுள்ள குறிப்பாக வவுனியா மாவட்டத்திலுள்ள தேவாலயங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டது.
நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களின் வழிபாட்டு நாள் என்பதால், ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெற்றாலும் என்ற முன்னெச்சரிக்கையில் இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
'வெடிகுண்டு மிரட்டல்கள் எவையும் விடுக்கப்படவில்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன' என்று வவுனியா தலைமை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி மானவடு தெரிவித்தார். (ஒ,5,18,60,110)

## பாடசாலைகள்....

பாடசாலைகளும் இன்று திறக்கப்படுகின்றன.
தரம் 5, 11 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. அனைத்து ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு இன்று சமூகமளிக்க வேண்டும் எனவும் கற்பித்தலுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
தரம் 5 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு காலை 7.30 மணி முதல் 1.30 மணி வரையும், தரம் 13 மாணவர்களுக்காக காலை 7.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையும் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பாடசாலைகளின் புதிய கால அட்டவணையின் பிரகாரம் தமது கற்பித்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்ததன் பின்னர் ஆசிரியர்கள் வீடுகளுக்கு செல்ல முடியுமெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
அதிபர்களின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே, ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு பிரவேசிக்கவும் வெளியேறவும் வேண்டும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
அனைத்து ஆசிரியர்களும் பிற்பகல் 3.30 மணி வரை பாடசாலைகளில் கடமைகளின் இருக்க வேண்டிய தேவை இல்லை எனவும் அமைச்சின் செயலர் எம்.எச்.எம். சித்ரானந்த குறிப்பிட்டுள்ளார். (ஒ,எ)

அறிவித்தல்
சற்குணரத்தினம் துஷிகாந்தனின் இறுதிக் கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் 05.07.2020 இல் நீர்கொழும்பில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.
076 971 8318 குடும்பத்தினர். (c.34590) (13.17)

கண்ணீர் அஞ்சலி
மோகன் ஆகாஷன்
திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மேசைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளரும் மூத்த உறுப்பினருமாகிய மோகன் அவர்களின் பாசமிகு புதல்வன் ஆகாஷன் அவருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துகின்றோம்.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம். (T.Y.M.H.A)
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

## 24 ஆம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி



### அமரர் தம்பு இராமலிங்கம்

அன்னை மடி... 28.10.1931

இறைவனடி... 06.07.1996

(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபரும், விசேட ஆணையாளரும், மன்னார். அகில இலங்கை அரச அதிகாரம் பெற்ற உரை மொழிபெயர்ப்பாளர், எழுத்து மொழிபெயர்ப்பாளர்)

துணிவுள்ள மனங்கொண்டு
உயிரையும் துச்சமென மதித்து
வாழ்க்கையில் ஓர் ஒளியாய்
எல்லோருக்கும் விளங்கினார்
எம் அன்புத் தந்தை!

இல.58, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### கந்தையா சுந்தரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஊழியர் – சாவகச்சேரி வைத்தியசாலை)



தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரம்பிள்ளை நேற்று (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தனங்கிளப்பு.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### செல்வி பத்மாவதி சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை – யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)

வேலணை கிழக்கு தாவடியைப் பிறப்பிடமாகவும். யாழ்ப்பாணம் கந்தர்மடம் இந்து மகளிர் ஒழுங்கையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செல்வி பத்மாவதி சுப்பிரமணியம் நேற்று (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா அவர்களின் அன்பு மகளும். புனிதவதி. காலஞ்சென்றவர்களான திலகவதி. சண்முகநாதன். கமலாதேவி. மற்றும் இலட்சுமி தேவி (இந்திரா). தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான ஆறுமுகம். திருநாவுக்கரசு. மற்றும் அகிலத்திருநாயகி. காலஞ்சென்ற கணேசலிங்கம். மற்றும் குணரெத்தினம். காலஞ்சென்ற மகேந்திரநாதன் ஆகியோரின் மைத்துனியும் யசோதரா. சசிதரா. சபேசன். முரளிதரன். கிரிதரன். ஸ்ரீதரன். கலாதரா. வசுந்தரா (லதா). சுமித்திரா. சிவானுஜா. சேயோன். சிவப்பிரியா. சுபேந்திரன். ஷர்மிளா. பிரியந்தா. ஷர்மி. வானதி ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும். குமரன். காந்தன். சயந்தன். வரதன். தர்மரெட்ணம். சண்முகரெட்ணம். திலானி. பேரின்பநாயகி. திலகா. ஜெயவதனி. காலஞ்சென்றவர்களான பிரபாகரன். புஷ்பநாதன மற்றும் மதன். நிஷானி. இன்பன் இந்திரகுமார். நிலோஜா ஆகியோரின் அன்பு மாமியும். திவ்வியா. விக்னேஷ். குமார். கிருஷ்ணி. சேயோன். திஷான். பிரம்மன். நீரஜா. தனுஷியன். கௌரீசன். ஆதிதன். அக்ஷாயினி. அகர்ஷியா. திலக்ஷன். சஜீவன். மதுஷன். லக்ஷிகா. மதுரன். ஜெய்திறன். மகதி. ஆரபி. பைரவி. ஆதிரையன். காவ்யா நிஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். கிருஷ்ணா . அனவி. ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2020) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:- 91/18, இந்து மகளீர் ஒழுங்கை, கந்தர்மட[illegible] [illegible]பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்

[illegible] 0212228[illegible]380




### ஸ்ரீ ருணவிமோக்ஷண சாயிநாதர் பிரதிஷ்டா ஏககுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக பெருவிழா

**09.07.2020**

பால்க்காப்பு - 06.07.2020 - திங்கட்கிழமை
07.07.2020 - செவ்வாய்க்கிழமை
08.07.2020 - புதன்கிழமை
ஆகிய மூன்று நாள்களும்
முற்பகல் 10 மணிமுதல் மாலை 6 மணிவரை
பத்தர்கள் பால் சாற்றலாம்

### மஹா கும்பாபிஷேகம்

09.07.2020 வியாழக்கிழமை
காலை 7.28 மணிமுதல் 8.58 மணிக்கு

பிரதம குரு
பிரம்ம ஸ்ரீ வா. ஜெய வஸ்தாங்க குருக்கள்

குறிப்பு: அன்னதானம், பிரசாதம் வழங்கப்படமாட்டாது. அடியவர்கள் கைகள் கழுவி முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளி பேணி சாயிநாதர் பூசையில் கலந்துகொள்ளலாம்.

T.P.:077 722 2568

"ஈழத்து சீரடி சாயி மந்திர்"
314, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 08 . 04 . 1957



இறைவன் அடியில் 05 . 07 . 2012

### அமரர் தர்மலிங்கம் கனகலிங்கம்

(முன்னாள் உதவி முகாமையாளர் மக்கள் வங்கி சுன்னாகம் கிளை)

அன்பு அப்பா ! ஆண்டுகள் எட்டு சென்றதுவே
இந்நாளில் ஆண்டுகள் பல சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள் என்றும்
எம்மை விட்டு அகலாது

லைமன் லேன்,
லோட்டன் வீதி,
மானிப்பாய் தெற்கு.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 28 . 05 . 1947



இறப்பு 03 . 07 . 2015

### திருமதி றங்கநாயகி நற்குணம்

திதி - துதியை - 06.07.2020

ஐந்தாண்டுகள் ஓடின எக்கணமும்
நினைவெல்லாம் உங்களிடம் தான் அம்மா!
இப்பிறவி முடிவதற்குள் மீண்டும்
உங்களை காண மனம் ஏங்குது அம்மா!
ஏனோ உள்ளுணர்வு சொல்லும் நீங்கள்
எங்கும் செல்லவில்லை எம்முடன் தான்
வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்கள் - அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

சேமபுலம் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்



### திருமதி விசாலாட்சி இராசரத்தினம்

காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் இல.903, சில்வா வீதி, வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி இராசரத்தினம் நேற்று அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு சுந்தரம் (பூசாரி) - தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் மருமகளும், இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பார்வதி (தேவி), பாக்கியம் மற்றும் தியாகராசா (ஓட்டோ அச்சகம் - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரின்பநாதன் (யாழ்பான்சி - யாழ்ப்பாணம்), இந்திராதேவி, பாக்கியநாதன் (ஆசிரிய ஆலோசகர் - வவுனியா வடக்கு கல்வி வலயம்), பற்பநாதன் (திருத்தணிகை பல்பொருள் வாணிபம் - சில்வா வீதி, வட்டக்கச்சி), சத்தியநாதன் (கிராம அலுவலர் - வட்டக்கச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற ரஞ்சனாதேவி (ஓய்வுநிலை ஆசிரியர்) மற்றும் கணேசமூர்த்தி, (ஓய்வுநிலை ஆசிரியர்), சிறீவாணி (ஆசிரியர் - வ/ சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்), தனலட்சுமி (ஆசிரியர் - வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்), றஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமியும், கஜனன், துவாரகன், பிரசாந்தன், பிரசன்னா, கிருஷாந், வித்தகன், வதுசன், நிவேதனா, யிதுர்சனா, லக்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2020) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவம்.

**இல. 903, சில்வா வீதி,**
**வட்டக்கச்சி, கிளிநொச்சி**

(CS 32744)(13,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**21 . 11 . 1997**



**மறைவு**
**05 . 07 . 2020**

### மோகன் ஆகாஷன்

**(மொறட்டுவ பல்கலைக்கழக கணிய அளவையியல் துறையை சேர்ந்த 3ஆம் வருட மாணவன், பழைய மாணவன் யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி)**

நல்லூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மோகன் ஆகாஷன் நேற்று (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் மோகன் - சிவகௌரி தம்பதிகளின் ஏக புதல்வனும் முத்துலிங்கம் - புவனேஸ்வரி, ஜெகநாதன் - சுப்புலட்சுமி தம்பதிகளின் அன்புப் பேரனும் நாகேஸ்வரி, சாந்தினி ஆகியோரின் அன்பு மருமகனும் மனோகர், மகேஸ்வரன் (பாபு), பாஸ்கரன் ஆகியோரின் பெறாமகனும் முரளிதரன், சதீஸ்குமார், பால்ரூபன் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2020) திங்கட்கிழமை குமார வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 03.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குமாரவீதி, நல்லூர்.**

**தகவல்:- குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

# திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி



**பிறப்பு**
**02.03.1938**

**இறப்பு**
**05.07.2020**

ஆறுகால்மடம் மயிலுவீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி நேற்று (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் **(CTB)** அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - ராசமணியின் மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிங்காரம் (சின்னப்பிள்ளை) அவர்களின் மருமகளும் இரத்தினத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசம்மா (கனடா) மற்றும் பத்மாவதியின் மைத்துனியும் சந்திராதேவி (ஜேர்மனி), இந்திராதேவி (இத்தாலி), சரோஜினிதேவி (வசந்தி - ஜேர்மனி), உதயகுமார் (தம்பி), வினோதினி, நந்தினி (ஜேர்மனி), சுரேஸ்குமார் (குட்டி - அன்ரா அச்சகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தராசா (ஜேர்மனி), பாலசிங்கம் (இத்தாலி), விவேகானந்தன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி, இராசலிங்கம் (விஜயன்), கருணாகரன் (ஜேர்மனி), ஜெயசித்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் கமல்ராஜ், சந்திரகலா, குகதர்சினி (ஜேர்மனி), ஞானகலா (ஜேர்மனி), கஜநிதி (ஜேர்மனி), கஜரூபன் (இத்தாலி), வினோத் (இத்தாலி), செந்தூரன் (ஜேர்மனி), மயூரன் (ஜேர்மனி), மதுரா (ஜேர்மனி), நித்திகா (ஜேர்மனி), பார்த்திகா, நிசாந்தன் (ஜேர்மனி), விதுஷன், தனுஷன், அஸ்வினி (ஜேர்மனி), பிரதீப் (ஜேர்மனி), கிருஷாந், ஜெய்சாந், ஜானுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:-**
**075 738 4098 (மகன் - உதயகுமார்)**
**077 535 1661 (மகள் - வினோதினி)**
**077 645 4956 (மகன் - சுரேஸ்குமார் குட்டி - யாழ்ப்பாணம்)**
**0049 6205 189690 (வசந்தி - ஜேர்மனி)**
**0039 3510 764149 (இந்திரா - இத்தாலி)**
**0049 9116 006133 (சந்திரா - ஜேர்மனி)**
**0049 6205 13923 (நந்தினி - ஜேர்மனி)**

**தகவல்:-**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

## அல்பிரட்...

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஒற்றையாட்சி என்ற சொற்பதத்தை கைவிட்டு இலங்கையை 'ஒரு பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத மாநிலம்' என்று அடையாளப்படுத்துவது, கொழும்பு அரசிடமுள்ள அதிகாரத்தை முடிந்தளவு மாகாண சபைகளுக்கு பிரித்து வழங்குவது, மாகாண சபையை பிரதிநிதிகளாலான இரண்டாவது பிரதிநிதிகள் சபையை உருவாக்குவதன் மூலம் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை மேலும் கட்டுப்படுத்துதல், நாடாளுமன்றத்தில் நிதிச் சட்டத்தை நீக்கி மாகாண சபைகளுக்கு சுயாதீனமாக நிதி சேகரிப்பதற்கு இடமளித்தல், கொழும்பு அரசின் கீழுள்ள மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்களை அரச அதிகாரிகளை மாகாண சபையின் கீழ் நியமித்தல் மற்றும் கொழும்பு அரசுக்கும் மாகாண சபைக்குமிடையில் ஏற்படும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு வேறொரு அரசமைப்பு நீதிமன்றத்தை உருவாக்கல் போன்ற விடயங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட போது 'இலங்கையின் எதிர்கால பயணத்திற்கு வரையறை இல்லை, ஒன்றாகப் பயணிப்போம் என்ற கொள்கைப் பிரகடனத்தில் 15 16 ஆம் பக்கத்தில் மக்களின் அரசமைப்பு என்ற விடயத்தில் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த புதிய அரசமைப்பு வரைவுக்கும் சஜித் பிரேமதாச ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கொள்கைப் பிரகடனத்திற்கும் இடையில் எவ்வித வேறுபாடும் கிடையாது.

நாட்டை பிரித்து வேறாக்க வேண்டுமாயின் சர்வதேசத்துக்கு மத்தியில் ஒற்றையாட்சி இல்லாது 'யுனிடரி ஸ்டேட்' என்ற பெயரில் விசேட தொழிநுட்ப அர்த்தம் கொண்ட ஆங்கில பதத்தை எங்களுடைய அரசமைப்பிலிருந்து நீக்க வேண்டும். பிரதான அரசியல் கட்சி பிரிவினைவாதிகளின் நோக்கத்தை தங்களுடைய கொள்கை பிரகடனத்தில் வெளிப்படையாக உள்வாங்கியிருப்பது பாரதூரமான செயற்பாடாகும். இவ்வாறாக விடயங்களை மநாயக்கர்களிடம் சமர்ப்பிக்காமல் முன்னெடுத்தனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருந்தால் இந்தப் பிரிவினைவாத கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு மநாயக்கர்களின் ஆசீர்வாதமும் மக்களின் ஆணையும் கிடைத்ததாகக் கூறியிருப்பார்கள். 2010, 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அதிகாரத்தைக் கைப்பற்றி நாட்டின் பெரும்பான்மை மக்களைக் காட்டிக் கொடுத்து நாட்டை பிளவுப்படுத்துவதற்காக ஒன்றிணைந்த அவர்கள் ஒரே அரசியல் குழுவாகும்.

முதலில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த இவர்கள் தற்போது ரணிலுக்கு சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற முடியாது, சஜித்துக்கு முடியுமெனக் கூறி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்கள். இந்த ஒப்பந்தத்தில் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடிந்தவரை வாக்குகளை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அனைத்து குடும்பங்களுக்கும் 25 ஆயிரம் ரூபா வழங்கும் போன்ற பொய்யான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். இன , மத அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகள் தங்களுடைய இனம் அல்லது மத மக்களை மட்டும் கருத்தில் கொண்டு ஏனைய இன, மத மக்களை பிற தரப்பினர் அல்லது எதிரிகளாக கருதுகின்றன. இவ்வாறானதொரு அரசியலினாலே ஏப்ரல் தாக்குதல் இடம் பெற்றது. ஏதோனும் ஒரு அரசியல் கட்சி தங்களுடைய இன, மத மக்களின் வாக்குகளை மாத்திரம் பெற்றுக் கொள்ளும் போது அவர்கள் ஒருவித அரசியல் கைதிகளாக மாறுகின்றனர்.

ஸஹ்ரான் ஹசிம் என்ற தீவிரவாதி மட்டக்களப்பில் ஒரு சிறிய ஆதரவாளர்களை உருவாக்கியதன் பின்னர் அரசியல் கட்சிகளுக்கிடையே போட்டி ஏற்பட்டது. இதனால், அந்த மாவட்டத்தில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் அழைத்து நிபந்தனைகளை விதிப்பதற்கும் அந்த பயங்கரவாதிகளுக்கு வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறான இனவாத மற்றும் பிரிவினைவாத அரசியல் கட்சிகள் இருக்கும் போது நாட்டின் தேசிய கட்சிகளை இவ்வாறான தீவிரவாத கட்சிகள் கட்டுப்படுத்தும். பின்னர அரசை மறைமுகமாக தீவிரவாத கட்சிகள் கட்டுப்பத்தும். கடந்த நல்லாட்சி அரசாங்கம் இவ்வாறானதொரு அரசியலை முன்னெடுத்தமையினாலேயே குண்டு தாக்குதலுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. நாட்டில் மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையிலிருந்து ஒற்றுமை சமாதானம் மற்றும் சகோதரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமாயின் இனவெறி அரசியலுக்கு எந்த நன்மையும் ஏற்படாத சூழலை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா, தமிழின விரோதப் போக்கில் செயற்படுவதாகத் தெரிவித்து சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## கரும்புலிகள்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் நினைவுச் சின்னங்கள், நினைவுத் தூபிகள், மாவீரர் துயிலும் இல்லங்கள் முழுவதும் இராணுவத்தினரின் முழுமையான கண்காணிப்புக்குள்ளேயிருந்தன.

இராணுவத்தினர் மோட்டார் சைக்கிள் ரோந்திலும் ஈடுபட்டனர். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தினரின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. பிரதான சந்திகள், தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் முக்கிய தலைவர்களின் நினைவுச் சின்னங்கள் அமைந்துள்ள இடங்கள், மாவீரர் துயிலும் இல்லங்கள் என்பவற்றிலும் இராணுவத்தினர் அதிகளவு குவிக்கப்பட்டனர்.

வீதிச் சோதனை நடவடிக்கைகளும் நேற்று அதிகரிக்கப்பட்டிருந்தன. வீதிகளில் செல்வோரில் சந்தேகத்துக்கு இடமானவர்கள் மறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

தமிழ் மக்கள் மனதில் அச்சம் ஏற்படும் வகையில் இராணுவத்தினரின் செயற்பாடு அமைந்திருந்தது. (ஒ,5,26)

## சிவாஜி...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் இல்லத்தில், பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு கேக் வெட்டியது தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டிலே அவர் கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர், பருத்தித்துறை நீதிவானின் இல்லத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், பிணையில் செல்ல நீதிபதி உத்தரவிட்டார்.

ஜூலை 5 ஆம் திகதி தமிழீழ கரும்புலிகள் நாளை அவர் கடைப்பிடிக்க முற்படலாம் என்ற எதிர்பார்ப்பிலேயே எம்.கே.சிவாஜிலிங்கம் கைது செய்யப்பட்டார் என்று சிவாஜிலிங்கத்துக்கு நெருங்கிய வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

**சிறிதரனிடம் விசாரணை**

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான சி.சிறீதரனிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர். கிளிநொச்சியிலுள்ள அவருடைய காரியாலயமான அறிவகத்தில் வைத்து பொலிஸாரால் அவர் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் நாள் நினைவேந்தல் நிகழ்வை நடத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முயற்சித்தார் என்று கிடைத்த தகவலையடுத்தே விசாரணை நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,த,ப,26,6)

## பல்கலை....

பலாலி வீதி கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த மோகன் ஆகாஸ் (வயது23) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், மன்னார் வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என்று பூநகரிப் பொலிஸார் தெரிவித்தனர். டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ,ஐ,6,20)

## டிப்பர்...

பெட்டியை உயர்த்திவிட்டு, அதன் கீழ் நின்று பார்த்துள்ளார். இதன்போது டிப்பர் வாகனத்தின் பெட்டியை உயர்த்தி வைத்திருந்த 'பார உயர்த்தி '( ஜக்) நழுவியதால், பெட்டி திடீரென விழுந்தது. அதனுள் அகப்பட்டு நசுங்கி உயிரிழந்தார்.

கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்தவரும், மானிப்பாயில் தங்கியிருப்பவருமான சின்னராசா லிகிந்தன் (வயது40) எனபவரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார் இந்த விபத்துத் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (ஒ,எ,26)

## மா...

பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது. கோதுமை மாவின் விலையோ, வேறு எடையுடைய பக்கெட்டின் விலையோ அதிகரிக்கப்படவில்லை என அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ,ஐ)

## மாணவி...

நிலையில் மாணவியொருவரின் சடலம் மீட்கப்பட்டு ள்ளது. பாடசாலை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் அந்த மாணவி நேற்று உயிரிழந்துள்ளார்.

பாடசாலைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கான ஆயத்தப் பணிகள் இல்லத்தால் நேற்று மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேற்படி மாணவியை நீண்ட நேரம் காணாத நிலையில் இல்லத்தில் இருந்தவர்கள் அவரைத் தேடியுள்ளனர். விடுதியின் முதலாவது மாடியில் அமைந்துள்ள கழிவறையில் மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி மானவடு தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ஒ,ம,110)

## கிணற்றில்...

கப்பட்டுள்ளது. புத்தூர் நிலாவரையைச் சேர்ந்த ச.தர்மசீலன் (வயது37) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கிணறுக்குள் சடலம் இருப்பதைக் கண்டு அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ,எ,26)

## முன்னணி...

யின் அலுவலகத்துக்கு பொலிஸார் நேற்றுக் காலை சென்று, நினைவுதினத்தை கடைப்பிடிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தியிருந்தனர். அதனையும் மீறிக் கடைப்பிடித்தால் கைது செய்யப்படுவீர்கள் என்று எச்சரிக்கை விடுத்திருந்தனர். அதன் பின்னர் கொக்குவிலில் உள்ள அலுவலகத்தைச் சூழ இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் திருநெல்வெலியிலுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தை இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து நேற்று மாலை சோதனையிட்டனர். இதன்போது, தேர்தல் சுவரொட்டி வைத்திருந்தாக குறிப்பிட்டு ஒருவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு ள்ளார். (ஒ,5,26)

## டிப்பர்...

கரி பரந்தன் வீதியில் தம்பிராய் பகுதியில் விபத்து இடம்பெற்றுள்ளது. டிப்பர் வாகனத்துடன், மூன்று சில்லு மோட்டார் வாகனம் மோதி தீக்கிரையானது.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மூன்று சில்லு மோட்டார் வாகனம், கிளிநொ ச்சியிலிருந்து வந்த டிப்பருடனேயே மோதி விபத்துக்குள்ளானது.

மூன்று சில்லு மோட்;டார் வாகனத்தின் பின்பெட்டியினுள் மோட்டார் சைக்கிள் ஏற்றி வந்த நிலையில் இந்த விபத்து நடைபெற்றது. உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ஒ,5,6)

## லண்டன்...

பெற்று வந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். லண்டனிலிருந்து ஒரு வருடத்துக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருகை தந்த நீர்வேலியைச் சேர்ந்த செ.ஜெயசிறி (வயது49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் ஒரு லட்சம் ரூபா பணத்தை உறவினர் ஒருவருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும், அதனை கடந்த மாதம் 13ஆம் திகதி கேட்கச் சென்றபோது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 22ஆம் திகதியே தனக்கு உடல் நலக்குறைவாக இருப்பதாக ஜெயசிறி தெரிவித்துள்ளார். உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்தநிலையில் அவர் நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (ப-20,26)



## நலம்பெற்றார் ஜோகோவிக்!

சேர்பியா, ஜூலை 6

கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த உலகின் முதல்தர ரென்னிஸ் வீரர் ஜோகோவிக் அதிலிருந்து மீண்டுள்ளார். அவரது மனைவியும் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அவரும் கொரோனாத் தொற்றில் இருந்து நலம்பெற்றார்.

கொரோனாப் பெருந்தொற்றால் உலகின் முக்கிய தலைவர்கள், நட்சத்திர வீரர்கள் என்று பலரும் பாதிக்கப்பட்டிருந்தனர். ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள ஜோகோவிக், அவரது மனைவி, அவரின் பயிற்சியாளர் ஆகியோருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் கோரோனாவில் இருந்து ஜோகோவிக் மற்றும் அவரது மனைவி ஆகியோர் முழுவதுமாக மீண்டுள்ளனர். (ம)




## கென்ய வீரருக்குத் தடை

நைரோபி, ஜூலை 6

ஊக்கமருந்து தடுப்பு விதியை மீறிய கென்ய மாரத்தான் வீரர் கிப்சாங்கிற்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீண்ட தூர ஓட்டப்பந்தய வீரர் கென்யாவைச் சேர்ந்த வில்சன் கிப்சாங். மாரத்தானில் உலக சாதனை படைத்திருக்கிறார். 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் மாரத்தானில் வெண்கலம் வென்றிருந்தார். போட்டி இல்லாத காலத்தில் ஊக்கமருந்து சோதனைக்குத் தயா ராக இருக்கும் வகையில் தான் எங்கே இருக்கிறேன் என்ற விவரத்தை அவர் ஊக்க மருந்து தடுப்பு முகாமுக்கு முறையாக தெரி யப்படுத்தவில்லை. இதனால் அவருக்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)




# கோலியை சீண்டினால் அது ஆபத்தாக முடியும்

### கடந்தமுறை அதுதான் நடந்தது என ஹசில்வூட் அச்சம்

சிட்னி, ஜூலை 6

வரவிருக்கும் இந்தியா - ஆஸ்திரேலியா தொடரில் இந்திய அணியின் தலைவர் கோலியை வம்புக்கிழுக்கப் போவதில்லை. அவரை வம்புக்கிழுத்தால் அது எமக்குத்தான் ஆபத்தாக முடியும். கடந்த தொடரில் கோலியை வம்பிழுத்து முறையாக வாங்கிக்கட்டிக்கொண்டோம். அதன் பயன்களை அனுபவித்தோம் இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வூட்.



ஆஸ்திரேலியா இந்தியா இடையிலான டெஸ்ட் தொடர் தொடர்பில் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் ஹசில்வூட் மேலும் தெரிவித்ததாவது:

கோலியுடன் வார்த்தை மோதலில் ஈடுபடப் போவதில்லை. கடந்த முறை வார்த்தை மோதலில் ஈடுபட்டுத்தான் அவரை உசுப்பி விட்டுவிட்டோம். அவரும் அதை விரும்புவார். ஏனெனில் அது அவரில் உள்ள சிறந்ததை வெளிக்கொணர்கிறது. ஆனால் கோலி களத்தடுப்பில் ஈடுபடும் போது வேறுகதை. அப்போது வார்த்தைகளை வைத்துச் சீண்டி அவரை அதில் கவனச்சிதறல் கொள்ள வைக்கலாம். ஆனால் துடுப்பாட்டத்தின்போது நிச்சயம் சீண்டக்கூடாது, சீண்டினால் அவர் சீறி எழுந்து விடுவார் - என்றார். (ம)

## அணிக்குத் திரும்பினார் கபிரியேல்!

லண்டன், ஜூலை 6

உடற்தகுதி பெற்றதை அடுத்து இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் கபிரியேல் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொரோனாப் பெருந்தொற்றுக்குப் பின்னர் சுமார் 4 மாதங்களாக முடங்கியிருந்த கிரிக்கெட் உலகம் தற்போது இயல்புக்குத் திரும்புகின்றது. இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் இடையில் நாளைமறுதினம் ஆரம்பமாகும் மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருடன் கிரிக்கெட் மீண்டும் தொடங்குகின்றது.

இந்தத் தொடருக்கான மேங்கிந்தியத் தீவுகள் அணியின் கபிரியேல் சேர்க்கப்படவில்லை. உடற்தகுதி இல்லாத காரணத்தால் அவர் நீக்கப்பட்டிருந்தார். எனினும் உடற்தகுதி பெற்றதை அடுத்து அவர் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டார். (ம)



## கரனுக்கு கொரோனா இல்லை!

லண்டன், ஜூலை 6

இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் சாம் கரன் திடீர் காய்ச்சலால் அவதிப்பட்ட நிலையில், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்காக கரன் பயிற்சியில் ஈடுபட்ட போது அவர் திடீர் காய்ச்சலால் அவதிப்பட்டார். இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார். அவருக்கு கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பரிசோதனைகளின் அடிப்படையில் கொரோனாவால் கரன் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து நாளைமறுதினம் நடைபெறும் ஆட்டத்தில் கரன் விளையாடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# இலங்கைக்கு வருகின்றது ஐ.பி.எல் தொடர்: இந்திய கிரிக்கெட் சபை தீவிர பரிசீலனை

கொழும்பு, ஜூலை 6

இந்த வருடத்துக்கான ஐ.பி.எல் தொடர் இந்தியாவில் நடைபெறாது என்று ஏறக்குறைய முடிவாகியுள்ள நிலையில், தொடரை இலங்கையில் அல்லது ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்தப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரியொருவர் தெரிவித்ததாவது:

உள்நாட்டில் ஐபிஎல் போட்டியை நடத்தத் திட்டமிட்டிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வேறு வழியின்றி வெளிநாட்டில் நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இலங்கை ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய இரு நாடுகள் தேர்வில் உள்ளன. இன்னும் இடம் முடிவாகவில்லை. ஆனால், பெரும்பாலும் வெளிநாட்டில் ஐ.பி.எல் போட்டியை நடத்தவே வாய்ப்புள்ளது.

ஒருசில அணிகள் வந்தால் பரவாயில்லை. 8 அணிகள் ஐபிஎல் போட்டியில் பங்கேற்கும்போது கொரோனா வைரஸால் போட்டி நடத்தும் சூழல் இல்லை. வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் பாதுகாப்பாக இருக்காது. அப்படியே நடத்தினாலும் ரசிகர்கள் இல்லாமல் நடத்த வேண்டும். அவ்வாறு நடத்த விருப்பமில்லை. ஆதலால், இலங்கை அல்லது ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய இரு நாடுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. விரைவில் அது குறித்து முடிவு எடுக்கப்படும்' எனத் தெரிவித்தார். (ம)



# தென்சீன கடல்பரப்பில் அமெ. போர்ப் பயிற்சி!

**பீஜிங், ஜூலை 6**

**தென்சீனக் கடல்பரப்பில் அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் நேற்றுப் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன. இதையடுத்து அந்தப் பகுதியில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.**

கொரோனா வைரஸ் சீனாவில் இருந்து தோற்றம்பெற்றாலும் அதனால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடாக அமெரிக்காவே உள்ளது. இந்த நிலையில், சீனா கொரோனா பற்றிய தகவல்களை உலகுக்கு மறைத்து விட்டது என்றும், கொரோனாவை சீன வைரஸ்என்றும்அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சாடினார். இதையடுத்து அமெரிக்கா - சீனா இடையிலான முறுகல் மேலும் வலுப்பெற்றது.

மறுமுனையில், இந்தியா - சீனா இடையிலான கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் எல்லை அத்துமீறல்களால் இரு நாட்டு இராணுவத்தினரும் பரஸ்பரம் மோதிக்கொண்டனர். இரு தரப்புக்களிலும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருந்தன. இதனால் சீனா, இந்தியா இடையிலான உறவிலும் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இத்தகையதொரு பின்னணியில் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் தென்சீனக் கடல்பரப்பில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளமை சர்வதேச சமூகத்தைப் பரபரப்பாக்கியுள்ளது. தென்சீனக் கடல்பகுதி மீது பிலிப்பைன்ஸ், வியட்நாம் உள்ளிட்ட பலநாடுகளுக்கும்உரிமைஉள்ளது என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், சீனா அதை ஏற்றுக்கொள்ளாது அது தனக்கு மட்டுமே சொந்தம் என்று தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

New Batch Start
**Graphic**
Diploma in Graphic Designing
**British College**
of Higher Studies
021 222 4550, 076 2800 208
**Sirampiyady lane, Stanley road, Jaffna.**

முருகன் துணை

## எழுதுவினைஞர் தேவை

இணுவில் கந்தசுவாமி கோவிலிற்கு எழுதுவினைஞர் தேவை. கீழ்வரும் தகைமை உடையவர்கள், தர்மகர்த்தாசபை, இணுவில் கந்தசுவாமி கோவில் என்ற முகவரிக்கு சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

*தகைமை :*

**1.சைவசமயத்தவர், சைவபோசனை உடையவர்(விரும்பத்தக்கது)**
**2. 50 வயதுக்கு மேற்பட்ட தேகாரோக்கியம் உடையவர்**
**3. களஞ்சியம் /கணக்கியல் அறிவு**
**4. ஆலய நடைமுறைகளில் ஈடுபாடுகொண்டவர்**
**5. சமய அறிவு உடையவர்**

**• சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.**
**• விண்ணப்பமுடிவுதிகதி : 31.07.2020**

தர்மகர்த்தா சபை,
இணுவில் கந்தசுவாமிகோவில்.
தொ.இல: 0773604456

# ரயில் விபத்தில் 22 பேர் இறப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 6



கிழக்குப் பாகிஸ்தானில் சீக்கிய யாத்திரீகர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மீது பயணிகள் ரயில் மோதியதில் குறைந்தது 22 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், பலர் காயமடைந்துள்ளனர் என்றும் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பஞ்சாப் மாகாணத்தின் ஷேகுபுரா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இந்தப் பேருந்து, பாதுகாப்பில்லாத ரயில் கடவையை கடக்க முயன்றபோது விபத்துக்குள்ளாகியுள்ளது. உயிரிழந்தவர்களது சடலங்களும் காயமடைந்தவர்களும் அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாக மாவட்ட பொலிஸ்துறைத் தலைவர் காசி சலாவுதீன் தெரிவித்துள்ளார்.

சீக்கிய யாத்திரீகர்கள் வடமேற்கு நகரமான பெஷாவரைச் சேர்ந்தவர்கள் என்றும், ஷேகுபுராவைச் சேர்ந்த நங்கனா சாஹிப்பின் ஆலயத்திலிருந்து திரும்பி வந்தபோதே இந்த விபத்து நடந்துள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தனது இரங்கலைத் தெரிவித்தார். (எ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
10
.
02
.
1938



மறைவு
05
.
07
.
2020

## சின்னையா செல்வநாயகம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை (நல்லூர்) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செல்வநாயகம் நேற்று (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - இரத்தினவல்லி தம்பதியரின் அன்பு மருமகனும், சுகிர்தாமலரின் (ஆசை அம்மா), பாசமிகு கணவரும், திருமகள். லோகநாதன். ரகுநாதன். செல்வநாதன். காலஞ்சென்ற சண்முகநாதன் (கிளி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருளானந்தம். ஞானேஸ்வரி. மதிவதனி. ஜீவரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும், திருவருள்செல்வன். அபிவர்மன்.அபிராமன். டனுசன். அபிஷன். அனுஷன். தர்ஷனா. தீபானா. அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2020) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 32744)(13.17)

## கண்ணீர் அஞ்சலி



மட்டுவில் மத்தி
ஸ்ரீ ஞானவைரவர்
தேவஸ்தான பற்றாளர்
(சரவணமுத்து - சிவபாய்க்கியம்
தம்பதியரின் அன்பு மகன்)

**சரவணமுத்து**
**சிவராசா**

அவர்கள்
03.07.2020 இல்
ஆஸ்திரேலியாவில் காலமான
செய்தி அறிந்து மிகுந்த
துயர் அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
ஞானவைரவப் பெருமனை
பிரார்த்திக்கின்றோம்.

(c.34591) (13.17)

**ஸ்ரீ ஞானவைரவப் பெருமான்**
**தேவஸ்தானம், மட்டுவில் மத்தி**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.